விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram. WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து
Western Union,
MoneyGram, Ria மூலம்
அனுப்பிய பணத்தை
ஒரு சில நிமிடங்களில்
நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1076)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 13 திங்கட்கிழமை (28.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 009

## புதுக்குடியிருப்பு தொற்றாளரின் உடலில் வீரியம் கூடிய கொரோனா வைரஸ்

### மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தகவல்



(யாழ்ப்பாணம்)
முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட நபரிடம் பெறப்பட்ட கோவிட் - 19 வைரஸ் வீரியம் கூடியது என மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறியுள்ளதாவது, ▷19

## வடக்கு - கிழக்குக்கு சிவப்பு எச்சரிக்கை

### வளிமண்டலவியல் திணைக்களம்

(கொழும்பு)
வடக்கு - கிழக்கு மாகாணங்கள் மற்றும் வடமத்தி மற்றும் மேற்கு, மத்தி ▷19

### பெரும்பான்மை மக்களின் சாசனங்கள் வாயிலாக

# வரலாறுகள் தமிழருக்கு எதிராக திரிக்கப்படுகிறது

### நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)
பெரும்பான்மையின மக்களின் சாசனங்கள் வாயிலாக வரலாறுகள் தமிழருக்கு எதிராகத் திரிக்கப்பட்டு எழுதப்பட்டு வருகின்றன என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

"அழிக்கப்படும் சாட்சியங்கள்" நூல் வெளியீடு யாழ்.பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு நிகழ்த்திய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"இந்த நாட்டின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் ▷19

### ஆரியகுளத்திலிருந்து
## முதியவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்.நகரில் உள்ள ஆரிய குளத்திற்குள்ளிலிருந்து முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதே பகுதியைச் ▷19

### இரணைமடுவின்
## மேலும் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டன

(முறிகண்டி)
இரணைமடுக்குளத்தின் இரண்டு வான் கதவுகளின் வாயில்கள் நேற்று மாலை 5.00 மணிக்கு 6 அங்குலங்களில் திறந்து விடப்பட்டுள்ளது. ▷19

### யாழ்.மாநகர சபையின்
## முதல்வர் வேட்பாளராக ஆனல்ட் மீண்டும் தெரிவு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் பதவிக்கு மீண்டும் ஆனல்ட்டை நிறுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

இருப்பினும் நல்லூர் பிரதேச சபை ▷19

### ஜனவரி 1 முதல்
## திரையரங்குகளை திறக்க அனுமதி

(கொழும்பு)
சுகாதார வழிகாட்டல்களுக்கமைய ஜனவரி முதலாம் திகதி முதல நாடளாவிய ரீதியில் உள்ள திரையரங்குகளை திறப்பதற்கு புத்த ▷19

### அரசியல் கைதிகளை காப்பாற்றக் கோரி
## யாழில் இன்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)
அரசியல் கைதிகள் பலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள ▷19

## புதிய அரசியலமைப்பை உருவாக்கும்வரை மாகாணத் தேர்தலை நடத்தக்கூடாது

### அமைச்சர் சரத் வீரசேகர விடாப்பிடி



(கொழும்பு)
புதிய அரசமைப்பை உருவாக்கும்வரை மாகாண சபைத் தேர்தல்களை நடத்தக் கூடாது என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

"மாகாண சபைகள் தொடர்பான புதிய சட்டங்கள் புதிய அரசமைப்பில் உள்வாங்கப்படும். மாகாண சபைகள் குறித்த தனது கருத்தினை பலமுறை ▷19

### காங்கேசன்துறை கடற்கரையில்
## 380 கிலோ கஞ்சா கரையொதுங்கியது

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை கடற்கரையில் கரையொதுங்கிய 380 கிலோ கிராம் கஞ்சா பொதி காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்பு பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று ▷19

### மருதனார்மடம் கொத்தணி
## சங்கானையைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
மருதனார்மடம் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் கொத்தணியில் சங்கானையைச் சேர்ந்த வியாபாரிக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் ▷19

### கொரோனாவால் உயிரிழந்தோரின்
## ஜனாஸாக்களை புதைக்க 'மன்னார்' அடையாளம்

(கொழும்பு)
கோவிட் - 19 நோயால் உயிரிழந்த இஸ்லாமியர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய மன்னாரில் மறிச்சுக்கட்டி மற்றும் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை இறக்காமம் ஆகிய இரு இடங்கள் அடையாளம் ▷19

## 4 கொரோனாவால் பேர் பலி
## +674 தொற்று

(கொழும்பு)
நாட்டில் கோவிட் -19 நோயால் மேலும் 4 பேர் உயிரிழந்துள்ள ▷19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 31 ஆம் நாள் நினைவலைகள்



பிறப்பு
23.12.1944

இறப்பு
28.11.2020

அமரர்

## சரவணை கந்தசாமி (சாமியார்)

( தயா மரக்காலை உரிமையாளர் )

அன்பின் ஆலயமாய்
அரவணைப்பில் அன்னையாய்
குடும்பத்தின் தலைமகனாய்
குவலயத்தின் நன்மகனாய்
தமக்கென வாழாது
எமக்கென வாழ்ந்து – என்றும்
நல்வழி காட்டினீர்
நாம் மறவோம் எம் தெய்வத்தை...

(5084)

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்


# கிளிநொச்சியில் பலத்த மழை; பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின

(முறிகண்டி)

கிளிநொச்சியில் பெய்து வரும் பலத்த மழையினால் தாழ்நில பகுதிகள் வெள்ளத்தால் நிறைந்தன. இதேவேளை சில குளங்கள் வான்பாய்ந்து வருகிறன.

கனகாம்பிகைகுளம் 7 அங்குலம் வான்பாய்ந்து வருவதுடன் பிரமந்தனாறு குளம் 3 அங்குலம் வான் பாய்கின்றது. (பகல் 1 மணி வாசிப்பின்படி)

பிரமந்தனாறு குளம் வான் பாய ஆரம்பித்துள்ளதால் பிரமந்தனாறு மயில்வாகனபுரம் பிரதேசத்தில் இருக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் கனகாம்பிகைக் குளத்தின கீழ்ப்பகுதியில் உள்ள இரத்தினபுரம், ஆனந்தபுரம் கிழக்கு, கனகாம்பிகைக்குளம், பன்னங்கண்டி, பரந்தன் பகுதிகளிலும் உள்ள மக்களையும் அவதானமாக இருக்குமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

(ஞா -100)


## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

BARATHY
சித்தன்கேணி

எமது மூன்று நிறுவனங்களிலும்
இணையவழிக் கற்கை (ZOOM CLASS)

A/L 2021, 2022

கலை, வர்த்தகம்
அனைத்துப் பாடங்களும் நடைபெறும்.

- பதிவுகளை எமது மூன்று நிறுவனங்களிலும் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளவும்.
- வெளி மாணவர்களும் பதிவு செய்யலாம்.
- விடுமுறைக்கால விசேட மேலதிக வகுப்புக்கள்.
- வினாவிடை வகுப்புக்கள் நடைபெறும்.
- கையேடுகளும் வழங்கப்படும்.
- அனைத்துப் பாடங்களிற்கும் இணையவழி பரீட்சைகளும் நடைபெறும்.

(C-1036)

மூன்று நிறுவனங்களிலும்
28.12.2020 - 01.01.2021 வரை
பதிவுகள் மேற்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| யாழ். நகரில் | காலை - 8.00 - 12.00 வரை | 077 220 9651<br>077 545 9856 |
| சுன்னாகம் | மாலை - 3.00 - 5.30 வரை | 076 638 5294 |
| BARATHY சித்தன்கேணி | மாலை - 3.00 - 5.30 வரை | 077 940 8682 |

NOTE : பதிவு செய்யப்படும் மாணவர்கள் மாத்திரமே இணைத்துக் கொள்ளப்படுவர்.

மேலதிக விபரங்களிற்கு - 077 376 3511




வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# மரண அறிவித்தல்

## தங்கம்மா சண்முகம்

(ஓமந்தை - காரைநகர்)



காரைநகர், பாலகாட்டைப் பிறப்பிடமாகவும் ஓமந்தை மருதங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கம்மா சண்முகம் நேற்று (27.12.2020) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி - சுந்தரி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - ஹப்பி தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சண்முகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, மகேஸ்வரி, இராசையா, நவரட்ணம், அமுதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலாம்பிகை, காலஞ்சென்ற மல்லிகாதேவி மற்றும் விமலாம்பிகை, காலஞ்சென்ற திருச்செல்வம், பஞ்சலிங்கம் (லண்டன்), இந்திராணி, தேன்மொழி (அலகரபட்ட குளம் வீரமாமுனிவர் வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சிவராசா, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், தவனந்தராசா, செல்வராணி (லண்டன்), பரமானந்தம் (தாரணி ஸ்ரோஸ் - பண்டாரிக்குளம்), தேவராசா (சண்முகா ரெக்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சர்மிளா, கிருஷாந்தினி (லண்டன்), சியாமளா, ஜனகன் (லண்டன்), பிரதாப் (பிரதேச செயலகம் - நல்லூர்), தாட்சாயினி, கஸ்தூரி, கோபிகா, சிந்துஜா, சோபிதன் (லண்டன்), தாரணி, தஜீவன், தாமிரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நதுனன், நிதன்ஜா, ஜஸ்வினி, ஆதிரா, தனிஷ், சதுர்ஜன், கபிலாஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஓமந்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


(C-1039)

மருதங்குளம்,
ஓமந்தை, வவுனியா.

077 844 5127

தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திரு. பொன்னையா கணபதிப்பிள்ளை

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் சிவன் கோவிலடி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கணபதிப்பிள்ளை நேற்று முன்தினம் (26.12.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற காசித்தம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் நடேஸ்வரன் (அதிபர் - கிளி/ பரமன்கிராய் அ.த.க பாடசாலை), சோபனா (பிரான்ஸ்), பரந்தாமன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுபோதினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் - சாவகச்சேரி), தயானந்தன் (பிரான்ஸ்), பிரதீபா ஆகியோரின் மாமனாரும் சதுரன், தனுஜன், அபிசாளினி, பிரதீப் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

22/4, பொலிஸ் நிலைய ஒழுங்கை,
கண்டி வீதி, சாவகச்சேரி.

077 248 7868

தகவல்:-
க. நடேஸ்வரன் (மகன்)

# கொரோனாவால் உயிரிழப்பவர்களின் உடல்கள் தகனம் செய்யப்படும்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

**(கொழும்பு)**

**சுகாதார அமைச்சுக்குக் கிடைத்துள்ள அனைத்து விசேட நிபுணர்களின் அறிக்கைகளுக்கு அமைய கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் அனைத்து நபர்களின் உடல்களும் தகனம் மாத்திரமே செய்யப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.**


கொரோனா மரணங்கள் தொடர்பான போலியான செய்திகளை உருவாக்குவதை தவிர்க்குமாறு கோரிக்கையும் விடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் நபர்களின் உடல்கள் சம்பந்தமான இறுதி கிரியைகள் நடத்தும் விதம் குறித்து சில அரசியல்வாதிகள் மற்றும் இணையத்தளங்கள் பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக சுட்டிக்காட்டி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்ய அனுமதி வழங்குமாறு முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். உலகில் பல நாடுகள் கொரோனாவால் மரணித்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கியுள்ளன.

இதனைச் சுட்டிக்காட்டியே நாட்டில் கொரோனாவால் இறக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதிக்குமாறு கோரப்பட்டு வருகின்ற நிலையில் சுகாதார அமைச்சு குறித்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது. (ஜ-4)

# கொட்டும் மழையிலும் ஜனாஸா போராட்டம்



(கொழும்பு)

கொட்டும் கடும் மழையிலும் ஜனாஸா எரிப்பினை எதிர்த்து கிண்ணியாவில் கவன் சீலைப் போராட்டம் நேற்று கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. இக் கவனயீர்ப்பில் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள மகஜரும் கிண்ணியா பிரதேச செயலாளரிடம் இதன் போது கையளிக்கப்பட்டது. (ஜ-4)

# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கலகெதர பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் வாகன சாரதி கொல்லப்பட்டு 6 பேர் காயமடைந்தனர்.

லொறி ஒன்று கட்டுப்பாட்டை இழந்த நிலையில் நான்கு வாகனங்களுடன் மோதியபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இந்தநிலையில் காயமடைந்தவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

லொறி சாரதியின் தவறான இயக்கமே விபத்துக்கான காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ)

# ஆடைத்தொழிற்சாலையில் 9 பேருக்கு தொற்று

(கொழும்பு)

காலியில் அமைந்துள்ள ஆடை உற்பத்தி தொழிற்சாலை ஒன்றில் கொரோனாத் தொற்றாளர்கள் 9 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தத் தொழிற்சாலையில் பணிபுரியும் மிலித்துவ பிரதேசத்தை சேர்ந்த பெண்ணொருவர் கொரோனா தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டார். இதனையடுத்து அந்த பெண்ணின் இணைப்பாளர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை நடத்தப்பட்டதுடன் அதில் 9 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருப்பது உறுதியாகியுள்ளது. (ஜ-4)

# 402 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 402 பேர் நேற்று நாடு திரும்பினர்.

மேற்படி வருகை தந்தவர்களில் 201 பேர் ஜோர்தானில் இருந்தும் 74 பேர் ஜப்பானில் இருந்தும் 65 பேர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்தும் 62 பேர் அவுஸ்திரேலியாவில் இருந்தும் வருகை தந்துள்ளனர். (ஜ)

# ஜனவரியிலிருந்து தூர இடங்களுக்கான பேருந்துகள் ஓடும்

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்டிருந்த தூர இடங்களுக்கான பேருந்து சேவையை அடுத்தாண்டு ஜனவரி மாதத்திலிருந்து ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றால், இடைநிறுத்தப்பட்டிருந்த தூர இடங்களுக்கான பேருந்து சேவையை சுகாதார பரிந்துரைகளின் கீழ் முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஜ)

# முஸ்லிம் கட்சிகள் நமக்கு தேவையா? சமூகம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

(மட்டக்களப்பு)

முஸ்லிம் கட்சிகள் நமக்குத் தேவையா? என்பதை சமூகம் மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார். நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பினால் பல்வேறு காரணங்களை முன் வைத்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

அப்போது இதன் அடிப்படை குர் ஆன், ஹதீஸ் என்று கூறப்பட்டது. இதனால் முஸ்லிம் மக்கள் மத்தியில் இக்கட்சிக்கு அமோக ஆதரவு வழங்கப்பட்டது.

அவரது மரணத்தைத் தொடர்ந்து கட்சியின் அடிப்படை என்று கூறப்பட்ட குர்ஆன்.ஹதீஸ் வழிகாட்டல்கள் ஓரங்கட்டப்பட்டன.

இதுவே சமூகத்திற்கு கிடைத்த முதலாவது சாபமாகும். முதன் முதலாக கட்சிக்குள் தலைமைத்துவப் போட்டி ஏற்பட்டது.

இப்போது கூட சுயநலத்தை மையமாக வைத்து ஆளுங்கட்சியோடு இணைந்துள்ள முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் போன்ற கட்சிகளால் நமது மையத்துக்களைக் காப்பாற்ற முடியவில்லை.

அது தொடர்பாக தமது எதிர்ப்பைக்கூட வெளிக்காட்ட முடியவில்லை. காரணம் அவர்களுக்கு வேண்டியது எல்லாம் கொடுக்கப்பட்டாயிற்று. இதனால் உரிமைகள் பற்றி வாய் திறக்க முடியாது.

பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் நம்மைக் காட்டிக் கொடுத்து நாம் சந்தோசமாக



வாழ முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ள இந்தக் கட்சிகள் இனியும் தேவையா? என்பது குறித்து சமூகத்திலுள்ள முக்கியஸ்தர்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இப்போது வந்துள்ளது.

அடுத்து வரும் தேர்தல்களில் இக்கட்சிகளுக்கு வாக்களித்து இன்னும் நமது சமூகத்தின் நிலையை மோசமாக்காமல் இருக்க முயற்சிப்போம் என்றும் அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ)

# மதில் விழுந்து சிறுவன் மரணம்

(மட்டக்களப்பு)

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அறபாநகர் கிராமத்தில் மதில் விழுந்து சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை நாசீவந்தீவைச் சேர்ந்த சிறுவன் தனது தாய் தொழில் நிமிர்த்தம் சவுதி அரேபியாவிற்கு சென்ற நிலையில் அறபாநகர் பகுதியிலுள்ள தனது சகோதரியின் வீட்டில் வசித்து வந்த நிலையில் எதிர் வீட்டு மதில் சுவரினை பிடித்து ஏறுவதற்கு முயற்சித்த போது மதில் சிறுவன் மேல் விழுந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த சிறுவனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வருகின்றனர். (ஜ)

# அரசியலமைப்பில் நம்பிக்கையில்லை எமது முன்மொழிவுகள் அடுத்தவாரம்

## சம்பந்தன் திட்டவட்டம்

(கொழும்பு)

**புதிய அரசியலமைப்பு தொடர்பாக அரசாங்கத்தின் வெளிப்பாடுகள் எமக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதாக காணப்படவில்லை என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யவல்லதான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்மொழிவுகள் அடுத்தவாரம் நிபுணர் குழுவிடத்தில் சமர்ப்பிக்கப்படும் என்ற முடிவில் மாற்றமில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.**



புதிய அரசியலமைப்புக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்மொழிவுகள் இறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அதில் பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தற்போதைய ஆட்சியாளர்களின் புதிய அரசியலமைப்புக்கான செயற்பாடு தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அமையும் என்ற விடயத்தில் அவர் கொண்டுள்ள நம்பிக்கை கள் பற்றி வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போர் மௌனிக்கப்பட்ட தன் பின்னரான சூழலில் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சகோதரரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த தருணத்தில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் 13ஆவது திருத்தச் சட்ட ஏற்பாடுகளுக்கு அப்பால் சென்று அதிகாரங்களை பகிர்ந்தளித்து இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வினை வழங்குவேன் என்று இந்தியாவுக்கும் சர்வ தேசத்திற்கும் வாக்குறுதி அளித்திருக்கின்றார்.

ஐக்கிய நாடுகள் செயலாளராக இருந்த யசூசி அகாசி இலங்கைக்கு வருகை தந்திருந்த தருணத்திலும் அவர் அவ்விதமான வாக்குறுதியை வழங்கியிருக்கின்றார். அது மட்டுமல்லாது எம்முடன் நடைபெற்ற சந்திப்புக்களின் போதும் அவ்விடயம் சம்பந்தமாக பேசியிருக்கின்றார்.

ஆகவே நாட்டின் இனப் பிரச்சினையொன்று இருக் கின்றது. தமிழ் மக்களும் ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவமாக, பாதுகாப்பாக, அமைதியாக வாழுவதற் குரிய வகையிலான வழி வகைகள் அரசியலமைப்பு ரீதியாக மீளப்பெறாதவாறு, உறுதியானவாறு மேற் கொள்ளப்பட வேண்டியுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

துரதிர்ஷ்டவசமாக அவர் ஏற்றுக்கொண்ட இந்தியாவுக்கும் சர்வ தேசத்திற்கும் வழங்கிய வாக்குறுதிகள் நடை முறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான நிலையில் அவர் மீண்டும் ஆட்சி அதி காரத்தில் இருக்கின்றார். அவருடைய சகோதரர் ஜனாதிபதியாக இருக்கிறார்.

தற்போது அவர்கள் புதிய அரசியலமைப்புக்கான நிபுணர் குழுவொன்றை நியமித்திருக்கின்றார்கள். அந்த குழு அனைத்து தரப்பினரிடத்திலும் கருத்துக்களை கோரியுள்ளது. அந்தக்குழுவின் கோரிக்கைக்கு அமைவாக நாம் கூட்டமைப்பாக எமது முன்மொழிவுகளை சமர்ப்பிக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# மறைந்து போகும் தமிழ்மொழி சமூக ஆர்வலர்கள் கவலை




(கொழும்பு)

நாட்டில் உள்ள மும்மொழிகள் சிறப்புற்று நிகழும் இக்காலத்தில் தமிழ் மொழியை தனித் தேவைக்கு தவிர்த்து கொண்டாலும் காலப்போக்கில் சொந்த மொழி மெல்ல மெல்ல சிதைவடைந்து சீன மொழி முதன்மையாகி நிற்க சக மொழிகள் அடிமையாகும் காலமும் வரலாம் எனச் சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை தமிழர்கள் வாழும் பகுதியில் உள்ள பெயர்ப்பலகை ஒன்றில் முதல் மொழியாக சிங்களமும், இரண்டாவது மொழியாக ஆங்கிலமும், மூன்றாவது மொழியாக சீன மொழியும் எழுதப்பட்டுள்ளது.

குறித்த பெயர்ப்பலகையில் தமிழ்மொழி இல்லை என்பது மிகவும் வருந்தத்தக்க விடயமாக உள்ளது என அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ஐ)

# மின் கட்டணப்பட்டியல் எஸ்.எம்.எஸ், மின்னஞ்சலில்

(கொழும்பு)

மின்கட்டணப் பட்டியலை, பயனாளர்களுக்கு எஸ். எம். எஸ். அல்லது மின்னஞ்சல் ஊடாக வழ ங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஸ்மார்ட் மீற்றர் பொருத்தப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார். (ஐ-4)

# அபாய வலயமாகும் அவிசாவளை?

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன் தினம் அடையாளம் காணப்பட்ட 598 பேரில், கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 235 பேர் உள்ளடங்குவதாக கொவிட் - 19 தொற்று பரவலை தடுப்பதற்கான தேசிய செயலணி குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தின், அவிசாவளை பகுதியில் மாத்திரம் 150 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் 164 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 84 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 பேரும், காலி மாவட்டத்தில் 12 பேரும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேபோன்று, இரத்தினபுரி மாவட்டத்தில் 17 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 7 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 17 பேரும் கொரோனா தொற்றுக்கு உள்ளான நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஐ)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு 1945.12.08

இறப்பு 2020.11.28

கடந்த 28.11.2020 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் இராமு பொன்னம்பலம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.12.2020) திங்கட்கிழமை காலை 4.00 மணியளவில் வீட்டில் நடைபெற்று பின்பு அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் சபீண்டிகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மேலும் அன்னாரின் மறைவையொட்டி அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள், பதாதைகள், தொலைபேசி, சமூக வலைத்தளங்களில் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் கல்வெட்டுப் புத்தகம் ஒருங்கிணைக்க உதவியவருக்கும், இன்றைய நிகழ்வில் கலந்து கொள்வோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அல்வாய் தெற்கு, அல்வாய்.

(C-1042)

குடும்பத்தினர்.

# வெளிமாவட்டங்களுக்கு சென்று வருவதால் கொரோனாத் தொற்று பரவும் அபாயம்

## திருகோணமலை வைத்தியசாலை சிற்றூழியர்கள் சுட்டிக்காட்டு

**(கொழும்பு) வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் வெளி மாவட்டங்களுக்குச்சென்று வருவதனாலேயே தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக திருகோணமலை பொது வைத்தியசாலை சிற்றூழியர்கள் தெரிவித்துள்ளனர்.**


திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் வைத்திய நிபுணர்கள் வாரத்திற்கு ஒருமுறை கொழும்பு, கம்பஹா மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்குச் சென்று வருவதாகவும் இவர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை எனவும் சிற்றூழியர்களுக்கு மாத்திரம் கட்டுப்பாடு விதிக்கப்பட்டு வருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த இரண்டு வைத்தியருக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் மூதூர் வைத்தியசாலையில் குடும்பநல உத்தியோகத்தர் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இவர்கள் வெளியிடங்களுக்குச் சென்று வந்ததாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறிப்பாக திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் வைத்திய நிபுணர்கள் வாரத்திற்கு ஒருமுறை வெளிமாவட்டங்களுக்குச் சென்று வருவதாகவும் இதேநேரம் நோயாளர்கள் அதிகளவில் தனியார் வைத்தியசாலைகளிலும் வைத்திய நிபுணர்களிடம் சிகிச்சை பெற்று வருவதாகவும் இதனால் திருகோணமலை மக்களுக்குத் தொற்று பரவும் அபாயம் அதிகளவில் ஏற்படக்கூடிய வாய்ப்புகளிருப்பதாகவும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஜ)

# கொரோனா மரணங்கள் குறித்து தீர்மானிக்க மதங்களுக்கு இயலாது



(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழப்பவர்களின் உடலை தகனம் செய்வதா ?அல்லது அடக்கம் செய்வதா? என்ற தீர்மானத்தை எடுப்பது மதங்களுக்கு பொறுப்பானதல்ல என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

கொவிட்-19 வைரஸ் தாக்கம் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட சுகாதாரக் குழுவின் தீர்மானத்திற்கு எதிராக செயற்படுவது முறையற்றதாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தால் ஏற்படும் மரணங்களுக்கு என்ன செய்வது என்று மதத்தலைவர்களிடம் வினவுவது பயனற்றது. அத்துடன் தொழிற்சங்கத் தலைவர்கள், மற்றும் அரசியல்கட்சித் தலைவர்களிடம் வினவுவதும் பயனற்றது.

கொவிட்-19 வைரஸ் தாக்கம் தொடர்பான தீர்மானத்தை சுகாதார குழு ஊடாக அரசாங்கமே எடுக்க வேண்டும். கொவிட்-19 வைரஸ் தாக்கம் தொடர்பில் எடுக்கும் தீர்மானங்கள் தற்போது பலதரப்பட்டதாக உள்ளது. இவ்வாறான செயற்பாடுகளை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

கொவிட்-19 வைரஸ் கட்டுப்பாட்டு செயற்பாடுகளை அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இனங்களுக்கு சாதகமாக தற்போது செயற்படுவது மாறுபட்ட விளைவினை ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# சுகாதார விதிமுறைகளை மீறிய 31 பேர் கைது

(கொழும்பு)

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாதமை முதலான குற்றச்சாட்டுகளில் நேற்று நிறைவடைந்த காலப்பகுதியில் 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி குறித்த குற்றச்சாட்டுகளில் இதுவரையில் நாடு முழுவதும் கைதுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 860 ஆக அதிகரித்துள்ளது. (ஜ-4)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 14 . 12 . 1941

மறைவு 28 . 11 . 2020

அமரர்

## சிவசுப்பிரமணியம் இராஜேஸ்வரி

கொக்குவில் மேற்கு சொர்ணவடலி சித்தி விநாயகர் கோவிலில் எழுந்தருளியிருக்கும் சித்தி விநாயகர் அரவணைப்பில் வாழும் விஸ்வகர்ம குலத்தில் பிறந்த அமரர் **அ. சிவசுப்பிரமணியம் இராஜேஸ்வரி** அவர்களின் 31 ஆம் நாள் நிகழ்வு அன்னாரின் இல்லத்தில் இன்று நடைபெறும். வானுறையும் தெய்வமாகிவிட்ட எமது அன்புத் தெய்வத்தின் நினைவலைகள் யாவற்றையும் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாளினதும் கொக்குவில் மேற்கு சொர்ணவடலி சித்தி விநாயகரினதும் பாதங்களில் வைத்து பூசிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:-
அ.சிவசுப்பிரமணியம் (கணவர்)
சி.நந்தகுமார் (மகன்) ஜேர்மன்
சி.கிருஷ்ணகுமார் (மகன்) ஹொலண்ட்
சி. ரஞ்சினி (மகள்) ஜேர்மன்
மற்றும் சகோதர, சகோதரிகள், பெறாமக்கள்.

"நந்தவாசம்"
சொர்ணவடலி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(5081)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 15.08.1948

மறைவு 24.12.2020

## அமரர் கதிரவேலு பூமணி

கைதடி கிழக்கு வீரமாகாளி அம்பாள் ஆலய நிர்வாகப் பொறுப்பாளரும், கைதடி விவா மின்பொருள் இரும்பு வாணிப உரிமையாளருமான திரு.க.சசிகுமார் (சசி), திரு.க.ராசா, திரு.க.ராயூ (தேசிய சேமிப்பு வங்கி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயார் அமரர் கதிரவேலு பூமணி அவர்களின் மறைவுச்செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா அமைதியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:-
நா. விஜயகுமார் (சங்கர்) குடும்பம் - சுவிஸ்
மெ. சந்திரன் குடும்பம் - சுவிஸ்
திருமதி. சங்கரப்பிள்ளை சடப்பிள்ளை- கைதடி கிழக்கு, கைதடி

கைதடி கிழக்கு,
கைதடி

(5082)

# மாணவர் கௌரவிப்பும் நிர்வாகத் தெரிவும்



(யாழ்ப்பாணம்)
யா/போகட்டி அ.த.க பாடசாலையின் 2020 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பும்,2021 ஆம் ஆண்டிற்கான புதிய செயற்குழுத் தெரிவும் கடந்த வியாழக் கிழமை பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பாடசாலையில் இவ்வருடம் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 14 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரன் மற்றும் தென்மராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்) வி.மதிதரன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களைக் கௌரவித்தனர்.

அதனைத் தொடர்ந்து 2021ஆம் ஆண்டிற்கான புதிய செயற்குழுத் தெரிவும், இடம்பெற்றது. (5-30)

# இறைச்சிக்காக வெட்டப்படும் வளர்ப்பு மாடுகள்

(நெளுக்குளம்)
வவுனியா பனிக்கர் புளியங்குளம் பகுதியில் தொடர்ச்சியாக மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படும் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் கன்று ஈனும் நிலையில் காணப்பட்ட மாடொன்றினை களவாடியவர்கள் அதனை இறைச்சிக்காக வெட்டியுள்ளனர். வயிற்றில் காணப்பட்ட கன்றினையும் அப்பகுதியில் வீசியெறிந்து விட்டு சென்றுள்ளனர்.

வவுனியாவில் பரவலாக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வரும் நிலையில் பனிக்கர் புளியங்குளம் பகுதியில் பெண் தலைமைத்துவ குடும்பத்தினால் வாழ் வாதாரத் திற்காக வளர்க்கப்பட்டு வந்த பசுவே இவ்வாறு வெட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வாறான சமூக விரோத செயலில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (5-299)

# மேலும் ஒரு வீட்டுத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது

## உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில் டக்ளஸ்



(நல்லூர்)
கடற்றொழில் அமைச்சினால் தேசிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்படும் வீடு சேதமடைந்த கடற்றொழிலாளர்களுக்கு உதவித்திட்டம் வழங்கும் வேலைத்திட்டத்தில், யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு நேற்றைய தினம் ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான காசோலை வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பயனாளிகளுக்கான காசோலைகளை வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்த அரசாங்கத்தினால் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மேலும் ஒரு வீட்டுத்திட்டம் வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அந்த வீட்டுத் திட்டத்தில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களை முன்னிலைப்படுத்தி வீட்டுத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

எனவே அவ்வாறான நிலையில் உள்ளோர் தமது பதிவுகளை தமது பிரதேச செயலகங்களில் மேற்கொள்வதன் மூலம் அந்த வீட்டுத் திட்டத்தினை பெறுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (5-33)



யாழ்ப்பாணம் தங்க நட்சத்திர லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்புத்துறை சனசமூக நிலையத்தில் இரத்ததான முகாம் இடம் பெற்றது. (படம்-ரவிசாந்)



**வடமராட்சி அல்வாய் பகுதியில் நீண்டகாலமாக நீர் வசதியின்றி வாழ்ந்து வந்த குடும்பத்திற்கு மைகல் நேசக்கரம் அமைப்பினராகிய த. சதானந்தன், கி. சுதர்சன் ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் மோட்டார் இயந்திரம், தொட்டி என்பவற்றுடன் கூடிய குழாய்க்கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டது. (படம்-மகாலிங்கம்)**

# மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் காயம்

(கரணவாய்)
மந்திகைப் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் மோதி இடம் பெற்ற விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று மதியம் மந்திகை சிலையடிப் பகுதியில் இடம் பெற்ற இவ்விபத்தில் கணவருடன் பயணித்த பெண் ஒருவரே காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(5-60)




வடமராட்சி கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தினால் அப் பிரதேசத்தை சேர்ந்த கல்வி கற்கும் மாணவர்களுக்கு நலன் விரும்பிகளின் நிதிப்பங்களிப்பில் கற்றல் உபகரணங்கள் நத்தார் தினத்தன்று வழங்கப்பட்டன.

# கனமழை பெய்யக்கூடும்

(கொழும்பு)

நாட்டை அண்மித்து வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலைமை காரணமாக பல இடங்களில் கனமழை பெய்யும் சாத்தியம் காணப்படுவதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதன்படி, வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் சில இடங்களில் 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகுமென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், ஏனைய சில பிரதேசங்களில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்பதுடன், சில இடங்களில் 75 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகுமென வும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. மின்னல் தாக்கம் மற்றும் மரங்கள் முறிந்து விழும் அபாயங்கள் காணப்படுவதாகவும் அது குறித்து பொது மக்களை அவதானமாக செயற்படுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# 36 வன்முறைக் கும்பல்களில் 24 குழுக்கள் நாட்டில்

(கொழும்பு)

**நாட்டில் கட்டமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் 24 குழுக்கள் தொடர்ந்தும் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

அந்தவகையில் இதுவரை நாட்டில் 36 குழுக்கள் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அதில் பல குழுக்கள் செயலற்ற நிலையில் இருப்பதாகவும் பொலிஸார் பொதுப் பாதுகாப்பு அமைச்சருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட வன்முறைக்கும் சில உறுப்பினர்கள் நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் இருந்து செயற்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் அறிவித்துள்ளனர். இந்நிலையில் குற்றவியல் சம்பவங்களில் ஈடுபடும் கும்பல்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (ஐ-4)

# மஞ்சளுடன் நால்வர் கைது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட ஒரு தொகை உலர்ந்த மஞ்சளுடன் நால்வர் ஹங்கம பகுதியில் வைத்து விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து சுமார் 20 ஆயிரம் கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மீட்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# வெதுப்பக உணவுகளின் விலைகளில் மாற்றம்?

(கொழும்பு)

அடுத்த ஆண்டு ஆரம்பத்துடன் சகல வெதுப்பக உணவு உற்பத்திகளின் விலைகளும் அதிகரிக்கப்படலாம் என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வெதுப்பக உணவு உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களின் விலை அதிகரிப்பே இதற்கு காரணம் என வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன கூறியுள்ளார்.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் வெண்ணெய்க்கு அறவிடப்பட்டு வந்த 200 ரூபாய் வரி 600 ரூபாயாக அதிகரிக்கப்பட்டது. இதற்காக வழங்கப்பட்ட நிவாரண காலம் இந்த மாதத்துடன் முடிவடைகிறது. இதனால், வெதுப்பக உணவுகளின் விலை அதிகரிப்பை புதிய ஆண்டில் எதிர்பார்க்க முடியும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-4)

# இருவர் கைது

(கொழும்பு)

வனவாசல் பகுதியில்வைத்து ஹெரோயினுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்களிடம் இருந்து 500 கிராம் ஹெரோயின் மற்றும் 2 இலட்சத்து 89 ஆயிரம் ரூபா பணம் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த நபர்கள் பயணித்த ஆட்டோவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ஐ-4)


## பணிப்பெண் தேவை

வீட்டிலே தங்கியிருந்து வயோதிபப் பெண் ஒருவரை பராமரிக்கக் கூடிய பணிப் பெண் தேவை (இடம் கொக்குவில்)

தொடர்பு:- 077 820 1195, 075 041 3579

(6063)



## மணிவிழா வாழ்த்துக்கள்

திருமதி.பவனேஸ்வரி முருகானந்தன் (லதா)

(ஆசிரியர், யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)



இன்று (28.12.2020) மணிவிழா காணும் திருமதி பவனேஸ்வரி முருகானந்தன் (லதா) அவர்களை உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அறுபது அகவையில்
அன்பு மலர் தூவி
ஆயிரம் கவி சொல்லி
அலங்கரிக்கின்றோம் – அம்மா
நீ அழியாப் புகழ் பெற்று நீடூழி வாழ்க!

வாழ்த்துவோர்:-
பிள்ளைகள்:- ஐது, அபி
"புத்தன் செம்பாடு"வதிரி, கரவெட்டி.

(C-1037)



## சேவைநலன் பாராட்டுதல்

திருமதி.சிதம்பரநாதன் சறோஜினிதேவி

(தலைவர், கச்சாய் தெற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கம்)



எங்கள் தலைவி சிதம்பரநாதன் சறோஜினிதேவி அவர்கள் கடந்த பத்து வருடங்களாக மத்தியஸ்த சபை உறுப்பினராக சேவை செய்து தற்போது அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளார். இவரைப் பாராட்டி வாழ்த்துவதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

வாழ்த்துவோர்:-
கச்சாய் தெற்கு மாதர் கிராம
அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள்.

(C-1030)





## 30 ஆவது ஆண்டு எனது ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...

• அரசியல் போராட்டம் • ஆயுதப் போராட்டம் • ஆன்மீகப் போராட்டம்

**இன்னும் பார்த்துக்கொண்டிருந்தால் தமிழினம் என்னாவது?**
**பொழுது விடியப் போகின்றது...சேவல் கூவப்போகின்றது.**
**எழுந்திடு தமிழா! தமிழா எழுந்திடு!!**
**தமிழன் விடுதலை விடியல் தெரியுது எழுந்திடு!**
**இன விடுதலை சார்ந்த கட்டமைப்புக்கும் பூகோள அரசியலுக்கும்**
**தலைமைத்துவம் ஒன்று அவசியம் எழுந்திடு தமிழா! எழுந்திடு!!**
**இன்னும் காலம் கடந்து விடவில்லையே எழுந்திடு! எழுந்திடு!!**

தமிழ் மக்களே!

இலங்கையின் இன்றைய அரசியல் நிலைப்பாட்டில் கட்சி அரசியலை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு தமிழின விடுதலை சார்ந்த அரசியலையும் பூகோள அரசியலையும் கையாள வேண்டிய நிலைக்கே வந்துள்ளோம்.

எனவே ஈசுர விநாயகர் தும்பிக்கையுடன் நேரிலே வரப்போவதில்லை. அவர் கூறியருளிய வாக்கின்படி இன்று மக்கள் மத்தியில் நடமாடிக்கொண்டிருக்கும் **சி.வி.விக்னேஸ்வரன்** ஐயாவே தமிழின விடுதலை கட்டமைப்புக்கு தலைவர் என்பதை மீண்டும் அனைத்து தமிழர்களுக்கும் கூறிவைக்க விரும்புகின்றேன்.

"ஓதியும் உணரமாட்டேன் உன்னையுள்வைக்க மாட்டேன்"
(தேவாரம்)

என்று திருநாவுக்கரசு நாயனார் தனது அறியாமையை நினைத்து உருகிப் பாடுவதைப் போன்று...

நினையுங்கள்! சிந்தியுங்கள்! தெளியுங்கள்! உணருங்கள்!
"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" வெற்றி நிச்சயம்.

சோழியூரான் பிறைசூடிக்குரு
(ஆன்மீகவாதியும் சந்ததிப்பூசகரும்)

(5072)

# மக்களின் பிரச்சினை தொடர்பாக தொடர்ந்தும் அழுத்தங்கள் கொடுப்போம்

## கஜேந்திரன் எம்.பி

(நெளுக்குளம்)

வனவளத்திணைக்கள த்தினால் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தொடர்ந்து அழுத் தங்களை பிரயோகிப்போம் என்று பாராளுமன்ற உறுப் பினர் செ.கஜேந்திரன் தெரி வித்துள்ளார்.

வவுனியாவிற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற் கொண்ட அவர் கற்குளம், மதுராநகர் போன்ற பகுதி களில் வசிக்கும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

அதன் பின்னர் ஊடகங் களுக்கு கருத்து தெரிவிக் கும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இந்தப் பகுதியில் உள்ள பெருமளவான குடும்பங் களிற்கு காணிகளிற்கான உறுதிப்பத்திரங்கள் வழங் கப்படவில்லை. இதனால் வீட்டுத்திட்ட திட்டங்கள் வழங்கப்படவில்லை. அதிக மான மக்கள் தற்காலிக குடி சைகளிலேயே வசித்து வரு கின்றனர்.

அவர்களுக்கு பல வருட ங்களாக குழாய்நீர்வசதி, மலசல கூடவசதி போன்றவை ஏற்படுத்திக் கொடுக்கப்பட வில்லை.

அத்துடன் பற்றைகளாக இருக்கும் தமது காணி களை துப்புரவு செய்து பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நெருக் கடிகள் ஏற்படுத்தப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித் துள்ளனர்.

எனினும் அருகில் உள்ள சிங்கள கிராமங்களை சேர் ந்த மக்கள் சுதந்திரமாக அந்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப் பிரச்சினைகளை தீர் பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண் டும்.

நீண்ட காலமாக பராமரி த்த காணிகளை வனவளத் திணைக்களம் அபகரிக் கின்றமை தொடர்பாக உரிய அமைச்சருடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது அவரது கவனத்தி ற்கு கொண்டு வந்திருக்கி றோம்.

பாராளுமன்றத்திலும் பேசியிருக்கிறோம் எனவும் இதனைப் பேசி தீர்க்க முடி யும் எனவும் அவர் தெரிவி த்தார்.

எனினும் அந்த நிலைமை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. எமது அழுத் தங்களை தொடர்ந்து பிர யோகித்து வருவோம் என அவர் மேலும் தெரிவித் தார். (5-299)

# மின்சாரத் தடையை நீக்க உதவினார் பா.உ

(நெளுக்குளம்)

வவுனியா திருநாவல் குளம் பகுதியில் தனிமை ப்படுத்தப்பட்டவரின் வீட்டு க்கு மின்சாரம் தடைப்பட்ட போதிலும் சீர்செய்யப்படா மல் காணப்படுவதாக தெரி விக்கப்பட்ட நிலையில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் உடன் நடவ டிக்கை எடுத்து மின் இணை ப்பை பெற்றுக்கொடுத்துள் ளார்.

கொரோனா தொற்று கார ணமாக திருநாவற்குளம் பகுதியில் பல குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள் ளன.

இந் நிலையில் ஒரு வீட்டி ற்கு மின் தடை ஏற்பட்டமை யினால் சுகாதார பிரச்சினை காரணமாக மின்சாரசபை ஊழியர்கள் மின் தடையை சீர் செய்ய அச்சமடைந்திரு ந்தனர்.

இதனையடுத்து குறித்த விடயம் தொடர்பாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபனுக்கு அறிவிக்கப் பட்ட நிலையில் குறித்த பகுதிக்கு நேரடியாக சென்ற அவர் மின்சார சபை ஊழி யர்களுடன் தொடர்புகொண்டு சுகாதார முறைகளை பின் பற்றி மின் இணைப்பை சீர்செய்ய ஏற்பாடு செய்திரு ந்தார்.

இதனையடுத்து குறித்த வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. (5-299)

# இடமாற்றம் தொடர்பில் அமைச்சருடன் சந்திப்பு

(குப்பிழான்)

அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவுக்கும், அகில இல ங்கை அபிவிருத்தி உத்தி யோகத்தர் சங்கப் பிரதிநிதி களுக்கும் இடையிலான சந்திப்பு அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

கடந்த 20 ஆம் திகதி முல்லைத்தீவில் இடம் பெற்ற சந்திப்பின் தொடர்ச்சி யாக வெளி மாவட்டங்களில் கடமையாற்றும் அபிவிரு த்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் இடமாற்றம் மற்றும் ஏனைய பிரச்சினை கள் தொடர்பில் மேற்படி சந்திப்பில் கலந்துரையாட ப்பட்டது.

அத்துடன் தமது கோரிக் கைகள் அடங்கிய மகஜரை யும் அவர்கள் அமைச்சரி டம் கையளித்தனர்.

இது தொடர்பில் சம்பந் தப்பட்ட அமைச்சருடன் கலந்துரையாடி விரைவில் தீர்வு பெற்றுத் தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவான ந்தா உறுதியளித்தார். (5-18)

# தேசிய பாதுகாப்பு தின நிகழ்வு



(பனிக்கன்குளம்)

2004ஆம் ஆண்டு டிசெ ம்பர் 26 அன்று நாட்டில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அன ர்த்தத்தில் பல்லாயிரக்க ணக்கானவர்கள் உயிரி ழந்தும் காணாமலும் போனா ர்கள். எதிர்பாராதவிதமாக இடம்பெற்ற இந்தச் சம்பவ த்தை தொடர்ந்து அரசு குறி த்த தினத்தை தேசிய பாது காப்பு தினமாக பிரகடனப்ப டுத்தி 2005ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் குறித்த தினத்தில் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் முக மாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான இயற்கை அனர் த்தங்களிலிருந்து விடுபடும் முகமாக விழிப்புணர்வுக ளையும் மேற்கொண்டு வருகின்றது.

அந்தவகையில் ஆழிப் பேரலை ஏற்பட்டு 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நாடளாவிய ரீதி யில் இடம்பெற்றுவரும் நிலை யில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் தேசிய பாது காப்பு தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமல நாதன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் இ.இலிங் கேஸ்வரகுமார் மற்றும் சர்வ மதத் தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர் கள், கரைதுறைப்பற்று பிர தேச செயலாளர், கிராம உத்தியோகத்தர்கள் உள் ளிட்ட அரச அதிகாரிகள் கல ந்து கொண்டனர். (5-281)

# நீர்மட்டம் அதிகரிக்கும் பட்சத்தில் வான் கதவுகள் திறக்கப்படும்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

(முறிகண்டி)

இரணைமடுக்குளத்திற் கான நீர்வருகை குறைந்து வருவதால் வான் கதவுகள் திறக்க வேண்டிய அவசியம் இல்லை என நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவல கம் அறிவித்துள்ளது.

படிப்படியாக மழைவீழ் ச்சி குறைந்து வருவதாக வும், அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் சந்தர்ப்பத்தி லேயே வான் கதவுகள் திறக் கும் நிலை ஏற்படும் என வும் தொடர்ந்தும் அவதா னித்து வருவதாகவும் நீர்ப் பாசன பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

நேற்றுக் காலை 7 மணி வாசிப்பின்படி,

36" கொள்ளளவு கொண்ட இரணைமடுக்குளம் 33" 08" அங்குலமாகவும், 26" கொள்ளளவு கொண்ட கல் மடுக்குளம் 25" 01" அங் குலமாகவும், 25" கொள்ள ளவு கொண்ட அக்கராயன் குளம் 24"09" அங்குல மாகவும் உயர்ந்துள்ளது.

அத்துடன் 19" கொள் ளளவு கொண்ட புதுமுறிப்பு குளம், 12" கொள்ளளவு கொண்ட பிரமந்தனாறு குளம், 10" 06" கொள்ளளவு கொண்ட கனகாம்பிகைக் குளம், 10" கொள்ளளவு கொண்ட கரியாலை நாகப டுவான்குளம், 09"06" கொள்ளளவு கொண்ட வன்னேரிக்குளம், 08" கொள்ளளவு கொண்ட குட முருட்டிக்குளம் ஆகியன அடைவு மட்டத்தை அடை ந்துள்ளதாகவும், அதில் பிர மந்தனாறுக்குளம் மற்றும் கனகாம்பிகைக்குளம் ஆகி யன வான்பாய்ந்து வருவ தாகவும் நீர்ப்பாசன திணை க்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து மழை பெய் கின்ற சந்தர்ப்பங்களில் குள ங்களை அண்மித்த தாழ் நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக செயற் பட வேண்டும் என மாவட்ட இடர் முகாமைத்துவ நிலை யம் அறிவித்துள்ளது. (5-100)

# யானையின் சடலம் கண்டுபிடிப்பு



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட கல்மடுக்குள த்தினை அண்மித்த நெத்த வியாற்றங்கரையினில் இறந்த நிலையில் யானை யின் சடலம் நேற்று இனங் காணப்பட்டது.

இதனையடுத்து வனஜீ வராசிகளின் திணைக்கள த்தினருக்கு தகவல் வழங் கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மற் றும் வனஜீவராசிகள் திணை க்களத்தினரும் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.

இறந்த யானை தந்தத் துடன் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-316)

## இராசிபலன்

28.12.2020
மார்கழி 13, திங்கட்கிழமை
திரயோதசி காலை 7.15 மணிவரை
சதுர்த்தசி காலை 7.16 மணி தொடக்கம்
ரோகிணி பிற்பகல் 4.43 மணிவரை
சுப நேரம் 12.28 - 1.58 மணிவரை
இராகுகாலம் 7.58 - 9.28 மணிவரை
சந்திராஷ்டமம்:-விசாகம், அனுசம்
கெர்ப்போட்டாரம்பம்
வளவன்


மேஷம்

யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.


ரிஷபம்

பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு


மிதுனம்

பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலில் கூடுதல் பொறுப்புக்கள் வந்து சேரலாம்.


கடகம்

புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களை வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.


சிம்மம்

வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் ஆர்வம் கூடும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் கிடைக்கும், போசன சுகமுண்டு.


கன்னி

நண்பர்களுக்கிடையில் நிலவிய கசப்புணர்வுகள் நீங்கும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், சாமர்த்தியமாகப் பேசி காரியங்களை வெற்றி கொள்வீர்கள்.


துலாம்

குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது.


விருச்சிகம்

இரவு பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், சென்ற இடங்களில் செல் வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


தனுசு

இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன் பிரச்சினையை தீர்க்க ஆக்கபூர்வமாக யோசிப்பீர்கள்,செய்தொழில் மேன்மையும், உயர்வும் கிடைக்கும்.


மகரம்

மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.


கும்பம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், தாய்வழி உறவினர் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


மீனம்

பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

கெட்ட நட்பை விடத் தனித்திருப்பது மேல்.

# தம்மிக்கவின் மருந்து தொடர்பில் மீண்டும் விடுக்கப்பட்டது எச்சரிக்கை

**(கொழும்பு)**

**கொரோனா வைரஸுக்கு எதிரான மருந்து என்ற வகையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள கேகாலை தம்மிக்க பண்டாரவின் ஆயுர்வேத மருந்து தொடர்பில் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

இந்த மருந்து, அரச வைத்தியசாலையின் கொரோனா நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு பரிசோதனை செய்யப்படுவதாக ஆயுர்வேத திணைக்கள ஆணையாளர் சத்ரு குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் மருந்தின் இரகசியம் உற்பத்தியாளரான தம்மிக்க பண்டாரவுக்கே தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எந்த அரச வைத்தியசாலைகளில் இந்த மருந்து நோயாளிகள் மத்தியில் பரிசோதனை செய்யப்படுகிறது என்ற தகவல்கள் தமக்குத் தெரியாது.

சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஆயுர்வேத நிபுணர்கள் குழு கடந்த 23 ஆம் திகதி சமர்ப்பித்த அறிக்கையின் பின்னரே இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

இந்தநிலையில் தம்மிக்க பண்டாரவின் மருந்தை நோயாளிகளுக்கு வழங்குவது ஆயுர்வேத மருந்துகளை அவர்களுக்கு வழங்குவதற்கு சமனாக இருக்காது என்று ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அத்துல சுமதிபால தெரிவித்துள்ளார். (ஐ)

# எட்டு மாதங்களில் பேரிழப்பு

(கொழும்பு)

நிதியமைச்சர் வெளியிட்டுள்ள 'நிதி மேலாண்மை அறிக்கை 2020-21' படி, அரசாங்கத்துக்கு சொந்தமான 52 நிறுவனங்களில் 31 நிறுவனங்கள் 2020 முதல் 8 மாதங்களில் மில்லியன் கணக்கில் நட்டத்தை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி, அரசுக்கு சொந்தமான 52 நிறுவனங்களிலிருந்து மொத்தம் ரூபா 10,447 மில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதன்படி இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கா ஏர்லைன்ஸ், இலங்கை போக்குவரத்துச் சபை, லங்கா சதொச, அரச பொறியியல் கூட்டுத்தாபனம், எச்.டி.எப். சி வங்கி மற்றும் அரசுக்கு சொந்தமான தொலைக்காட்சிகளான ரூபவாஹினி மற்றும் ஐ.டி.என் ஆகியவை பெரும் இழப்பை சந்தித்த நிறுவனங்களின் பட்டியலில் அடங்கும்.

அதேபோன்று ஊழியர்களின் நம்பிக்கை நிதியம், இலங்கை வங்கி, இலங்கை துறைமுக அதிகார சபை, லொத்தர் சபை, தேசிய காப்பீட்டு அறக்கட்டளை நிதியம், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் சீனித் தொழிற்சாலை ஆகிய அரசுக்கு சொந்தமான நிறுவனங்களும் இழப்பை சந்தித்த வையில் அடங்கும். (ஐ)

# கொரோனாப் பரவலுக்கு மத்தியில் அரசியல் இலாபம் தேடும் எதிர்க்கட்சி

## டயனா கமகே குற்றச்சாட்டு



(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில், எதிர்க்கட்சியினர் அரசியல் இலாபம் தேடுவதாக பாராளுமன்ற உறுப்பினர் டயனா கமகே குற்றம்சாட்டியுள்ளார்.

பெரும்பான்மை வார இறுதி நாளிதழொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலையில், கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த, எதிர்க்கட்சியினர் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

எனினும், கொரோனாத் தொற்றை அடிப்படையாகக் கொண்டு, அரசியல் இலாபம் தேடும் எதிர்க்கட்சியினரின் நடவடிக்கை குறித்து, தாம் கவலையடைவதாகத் தெரிவித்துள்ளார். (ஐ)

# கொழும்பில் மேலுமொரு பகுதி தனிமைப்படுத்தப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தின் மற்றுமொரு பகுதி தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கொழும்பு 9 இற்கு உட்பட்ட வேலுவனாராம வீதி நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதி போதைப் பொருளுக்கு அடிமையான 22 வயதுடைய ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (ஐ-4)

## சிசு உட்பட 7 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொட்டகலை பகுதியில் ஒன்றரை வயது சிசு உள்ளிட்ட ஏழு பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொட்டகலையில், 60 பேருக்கு கடந்த 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகியிருந்தன. இதில் 7 பேருக்குத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஐ-4)

## ஸ்பெய்னிலும் உருமாறிய கொரோனா

(மாட்ரிட்)

உருமாறிய கொரோனா வைரஸ் ஸ்பெயின் நாட்டில் பரவத்தொடங்கியுள்ளது.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸால் பெரும் பாதிப்பு ஏற்பட்டு வரும் நிலையில் தற்போது அந்த வைரஸ் உருமாற்றம் அடைந்துள்ளது.

உருமாறிய கொரோனா முதன்முதலில் இங்கிலாந்து நாட்டில் உறுதி செய்யப்பட்டது.

இந்த புதியவகை உருமாறிய கொரோனா பழைய கொரோனாவை விட 70 சதவிகிதம் வேகமாக பரவும் தன்மை கொண்டது என ஆய்வில் தெரியவந்துள்ளது. இதனால், மிகுந்த அச்சமடைந்துள்ள பல நாடுகள் இங்கிலாந்துடனான போக்குவரத்தை நிறுத்தியுள்ளன.


ஆனாலும், உருமாறிய கொரோனா வைரஸ் இங்கிலாந்து தவிர பிரான்ஸ், ஜப்பான், சிங்கப்பூர், தென்னாபிரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் உறுதி செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஸ்பெயின் நாட்டிலும் தற்போது உருமாறிய கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியுள்ளது.

உருமாறிய வைரஸ் 1 நபருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஸ்பெயின்-அரசு நேற்று அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.

அடுத்தடுத்து பல நாடுகளில் புதியவகை கொரோனா பரவி வருவதால் மக்கள் மிகுந்த கலக்கம் அடைந்துள்ளனர். (நி)

# கொரோனா நிவாரண மசோதா கையெழுத்திட மறுக்கும் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

கொரோனா நிவாரண மசோதாவில் ட்ரம்ப் கையெழுத்திட மறுப்பது பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தும் என ஜனாதிபதித் தேர்தல் வெற்றியாளர் ஜோ பிடன் தெரிவித்துள்ளார்.

உலக அளவில் கொரோனா வைரஸ் பாதிப்பில் முதலிடத்தில் உள்ள நாடு அமெரிக்கா. அந்நாட்டில் கொரோனா நிவாரணத்துக்காக 900 பில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்கீடு செய்ய அந்நாட்டு பாராளுமன்றம் அண்மையில் ஒப்புதல் அளித்தது.

இதையடுத்து, இது தொடர்பான கொரோனா நிவாரண மசோதா பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளது.

மசோதாவில் ட்ரம்ப் கையெழுத்திட்டால் தான் அது சட்டமாக்கப்பட்டு, கொரோனா நிவாரணத்துக்கான நிதி ஒதுக்கப்படும்.

ஆனால், இந்த மசோதாவில் அமெரிக்கர்களுக்கு குறைவான உதவியே கிடைப்பதாகவும் வெளிநாடுகளே அதிக பலனடைவதாகவும் கூறி மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க ட்ரம்ப் மறுத்து வருகிறார்.

மேலும், கொரோனா நிவாரணமாக அமெரிக்கர்களுக்கு தலா 600 டொலர் வழங்கப்படும் என மசோதாவில் குறிப்பிடப்பட்டிருப்பதை 2 ஆயிரம் டொலராக அதிகரிக்கும்படியும் ட்ரம்ப் அமெரிக்க பாராளுமன்றத்திடம் வலியுறுத்தியுள்ளார். இதனால், கொரோனா நிவாரண மசோதா சட்டமாவதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில், கொரோனா நிவாரண மசோதாவில் ட்ரம்ப் கையெழுத்திட மறுப்பதற்கு ஜோ பிடன் கண்டனம் தெரிவித்துள்ளார். (நி)

# காஸாவில் தாக்குதல்



(இஸ்ரேல்)

முற்றுகையிடப்பட்ட காஸா பகுதியில் ஹமாஸ் நிலைகளைக் குறிவைத்து இஸ்ரேலிய இராணுவம் வான் வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் ஆறு வயதுச் சிறுமியும் 20 வயதுடைய இளைஞர் ஒருவரும் காயமடைந்துள்ளதாக பாலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உத்தியோகபூர்வ பாலஸ்தீன செய்தி நிறுவனமான வாஃபாவின் கூற்றுப்படி, இஸ்ரேலிய போர் விமானங்கள் காஸா பகுதியின் கிழக்கு, வட மேற்கு மற்றும் மத்திய பகுதிகளில் நேற்று முன்தினம் சனிக்கிழமையன்று தொடர்ச்சியான ஏவுகணைகளை வீசியது. திறந்த விவசாய நிலங்களை சேதப்படுத்தியதாகவும் சுட்டிக்காட்டியது. (நி)



**ஆழிப்பேரலையின் 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுப் பணிமனையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பகல் இடம்பெற்றது.**

# ஐஸ் கட்டியாகிய ஏரி



(காஷ்மீர்)

இமாச்சல பிரதேச மாநிலம் லாகால்-ஸ்பிட்டி மாவட்டத்தில் உள்ள ஏரி கடுங்குளிர் காரணமாக ஐஸ்கட்டியாக உறைந்துள்ளது.

இந்தியாவின் வட மாநிலங்களில் தற்போது கடுங்குளிர் நிலவி வருகிறது. உத்தரகாண்ட், இமாச்சல பிரதேசம், ஜம்மு-காஷ்மீர் மலைப்பகுதிகளில் வெப்பநிலை மைனஸ் டிகிரிக்கு குறைந்து மக்களை வாட்டி வதைக்கிறது.

இமாச்சல பிரதேச மாநிலம் லாகால்-ஸ்பிட்டி மாவட்டத்தின் ஜோப்ராங் என்ற இடத்தில் உள்ள கொலூடு ஏரி கடுங்குளிரால் ஐஸ்கட்டியாக உறைந்துள்ளது. (நி)

# தி.மு.கவிற்கு ஆதரவாக பிரசாரம்-வைகோ அறிவிப்பு



(சென்னை)

சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க கூட்டணிக்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் பிரசாரத்தில் ஈடுபடப்போவதாக ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்த பின் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது தொகுதி பங்கீடு குறித்து எதுவும் பேசவில்லை என்றும் வைகோ தெரிவித்தார்.

அத்தோடு எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில், தி.மு.க. 200 தொகுதிகளில் வெற்றி பெறும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார். (நி)

## 101 வயது மூதாட்டி தடுப்பூசி பெற்றார்

(பேர்லின்)

ஜேர்மனியில் கொரோனாவைக் கட்டுப்படுத்தும் பைசர் தடுப்பூசி மருந்து பயன்பாட்டிற்கு வந்துள்ள நிலையில், முதலில் 101 வயது மூதாட்டிக்கு இந்த தடுப்பூசிபோடப்பட்டது.



ஜேர்மனியில் முதியோர் இல்லத்தில் இருப்பவர்கள், 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள், பராமரிப்பு ஊழியர்கள் ஆகியோருக்கு முதலில் தடுப்பூசி செலுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஐ.நா அமைதிப் படையினர் உயிரிழப்பு

(கொழும்பு)

மத்திய ஆபிரிக்க குடியரசில் மூன்று வெவ்வேறு இடங்களில் நடந்த தாக்குதல்களில் அடையாளம் தெரியாத போராளிகளால் மூன்று ஐ.நா. அமைதிகாக்கும் படையினரை கொன்றதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மத்திய ஆபிரிக்க குடியரசில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் சட்டமன்றத் தேர்தல்களுக்கான ஆயத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையிலேயே இந்த தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அறிகுறிகளற்ற கொரோனா புதிய வைரஸ் தொற்றை பி.சி.ஆர். சோதனையில் கூட உறுதிப்படுத்த முடியாது - சுதத் சமரவீர

(கொழும்பு)

**கொவிட்-19 வைரஸானது, எவ்வித அறிகுறிகளுமின்றி உடலில் எவ்வித மாற்றங்களையும் காண்பிக்காமல் ஆயிரக்கணக்கானோரிடம் பரவியுள்ளது. எனவே தற்போது நபரொருவருக்கு வைரஸ் தொற்று ஏற்படுமாயின் அவருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதா? அல்லது புதிய வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதா? என்பதை பி.சி.ஆர். பரிசோதனையின் ஊடாகக் கூட உறுதிப்படுத்த முடியாது என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பிரதானி விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒக்டோபர் 4 ஆம் திகதி நாட்டில் ஆரம்பமான இரண்டாம் அலை இரு மாதங்களில் தீவிரமாக பரவலடைந்துள்ளது. எனினும் இதனை மேலும் கட்டுப்படுத்த மக்களின் முழுமையான ஒத்துழைப்பு அத்தியாவசியமானதாகும். இதன் வைரஸ் அதன் தன்மையை மாற்றி புதிய வகை வைரஸாக இங்கிலாந்தில் மாத்திரம் பரவலடையவில்லை. வேறு நாடுகளிலும் பரவலடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. எனவே இலங்கையில் கொவிட் வைரஸை முற்றாக ஒழிக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

கொவிட்-19 வைரஸானது எந்தவொரு அறிகுறிகளும் இன்றி ஆயிரக்கணக்கானோரிடம் பரவியுள்ளது. எனவே தற்போது வைரஸ் தொற்று ஏற்பட்டாலும் அதன் எந்த வகை தொற்றியுள்ளது என்பதை அறிகுறிகள் மூலம் இனங்காண முடியாது.

அதுமாத்திரமல்ல. நாம் வழமையாக முன்னெடு



க்கும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் ஊடாகக் கூட அதனை இனங்காண முடியாது. வைரஸின் உள்ளிடம் யாதென இனங்கண்டால் மாத்திரமே கொவிட்-19 வைரஸா அல்லது புதிய வகை வைரஸா என்பதை கண்டறிய முடியும் என தெரிவித்தார். (ஜ-4)

JOB வேலை வாய்ப்பு

கைத்தொழில்கள் அமைச்சு
வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள்
தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபை (NEDA)

பின்வரும் பதவி வெற்றிடங்களுக்காக தகைமையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

01. தொழில்முயற்சி ஊக்குவித்தல் அலுவலர் (01)
02. தொழில்முயற்சி ஊக்குவித்தல் உதவியாளர் (03)
03. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல்-சாராதவர் (02)

விபரங்களுக்கு www.neda.gov.lk என்ற இணையதளத்தை பார்வையிடவும்.

விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவங்கள் ஆகியன ஆங்கில மொழியில் மாத்திரமே உள்ளன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஒன்லைன் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யுமாறு விண்ணப்பதாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அத்துடன், விண்ணப்பதாரிகள் உங்களின் தெளிவான நிழற்படமொன்று, அடிப்படை கல்விசார் தகைமைகளின் (சாத/ உத/ பட்டப்படிப்பு மாத்திரம்) சான்றிதழ்களின் நிழற்படங்கள் மற்றும் அனுபவக் கடிதம் (தொழில்முயற்சி ஊக்குவித்தல் அலுவலர் பதவிக்கு மாத்திரம்) (ஒவ்வொன்றினதும் 32Kb) ஆகியவற்றை விண்ணப்பத்துடன் பதிவேற்றம் செய்யவும். ஒன்லைன் விண்ணப்பமானது 2021 சனவரி 12 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்படும். தபாலில் அனுப்பப்படும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதென்பதுடன் எவ்வகையிலும் இந்நிறுவனமானது நாட்டில் நிலவும் கோவிட் நிலபரத்தினால் தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்கு பொறுப்பேற்க மாட்டாது.

தலைவர்/ பணிப்பாளர் நாயகம்,
தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபை,
இல.: 561/3, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு-05.

# அன்டிஜன் பரிசோதனையில் 49 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் பயணிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில், இதுவரை 49 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் பயணிகள் தொடர்பில் 11 இடங்களில் அன்டிஜென் சோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

அதன்படி கடந்த டிசெம்பர் 18 முதல் இதுவரை 8000 விரைவான அன்டிஜென் சோதனைகள் நடத்தப்பட்டன என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மேல் மாகாணத்திலிருந்து நாட்டின் பிற பகுதிகளுக்கு தொற்று பரவாமல் தடுப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட இந்த சோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

# சிறுபான்மை இனம் ஓரங்கட்டப்படுதலின் ஒரு கட்டமே ஜனாஸாக்கள் தகனம் உலக தமிழர் பேரவை விமர்சனம்

(கொழும்பு)

சிறுபான்மை சமூகங்களின் புறக்கணிப்பு மற்றும் ஓரங்கட்டப்படுதலின் நீண்ட வரலாற்றைக் கொண்ட இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் கட்டாயத் தகனக்கொள்கை ஒரு படி மிக அதிகம் என உலக தமிழர் பேரவை இந்த விமர்சனம் வெளியிட்டுள்ளது.

இந்த பகுத்தறிவற்ற மற்றும் பாரபட்சமான அரசாங்கக் கொள்கையை மாற்றியமைக்க அனைத்து சமூகங்களின் தலைவர்களும் தங்களால் முடிந்த அனைத்தையும் மேற்கொள்ள வேண்டும் என உலக தமிழர் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

கொரோனா உடலங்களின் தகனம் என்ற கட்டாயக்கொள்கை முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சிறுபான்மையினருக்கு பெரும் சீற்றத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

முஸ்லிம்களின் மத கொள்கையின் படி ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட வேண்டும். இந்த விடயத்தில் முஸ்லிம் சமூகம் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது.

அவர்களின் அடிப்படை மத நம்பிக்கைகளை மீறும் நடைமுறைகளை பின்பற்றும் படி கட்டாயப்படுத்துவது கொடூரமானது மற்றும் மனிதாபிமானமற்றது என்றும் உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பு கொரோனாவால் மரணிக்கும் ஜனாஸாக்கள் அடக்கம் செய்வது பொதுச்சுகாதாரத்திற்கு எந்த ஆபத்தையும் ஏற்படுத்தாது என்று தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இலங்கையில் மாத்திரமே இந் நடவடிக்கைக்கு மறுப்பு தெரிவித்து வருவதாகவும் உலகத் தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. (ஜ-4)

# பாதாளக்குழுத் தலைவர்களை கைது செய்ய சிறப்பு நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்ற பாதாள உலகத் தலைவர்களை கைது செய்து நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண கொழும்புச் சிங்கள ஊடகம் ஒன்றிடம் இதனை தெரிவித்துள்ளார்.

"வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் அறிவுறுத்தலின் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக சர்வதேச போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதால் இந்த பாதாள உலகத் தலைவர்களை கைது செய்வது தொடர்பில் இன்டர்போலுடன் கலந்தாலோசித்து தேவையான அனுமதி பெறப்பட்டுள்ளது.

இன்டர்போல் மூலம் சிவப்பு எச்சரிக்கை வழங்கப்பட்ட அனைத்து பாதாள உலக உறுப்பினர்களும் விரைவில் கைது செய்யப்பட்டு நாட்டிற்கு கொண்டு வரப்படுவார்கள்.

பாதாள உலக உறுப்பினர்களின் பெயர்கள் இன்டர்போலில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# சபாநாயகர் தனிமைப்படுத்தப்படலாம்

(கொழும்பு)

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவின் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருப்பது உறுதியாகியுள்ளது.

சபாநாயகரின் ஊழியர்களில் பலர் இந்தத் தொற்றாளரின் முதல் வரிசை இணைப்பாளர்கள் என்பதன் காரணமாக அவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இரண்டாம் வரிசை இணைப்பாளர்களாக சபாநாயகர் மற்றும் அவரது குடும்பத்தை சேர்ந்த சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்றாளரின் முதல் வரிசை இணைப்பாளர்கள் கொரோ



னாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டால், சபாநாயகரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

நடத்தப்படும் பி.சி.ஆர் பரிசோதனையின் பின்னரே அது தீர்மானிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# வெளிநாட்டிலுள்ளவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

சுமார் 40 நாடுகளில் தங்கியிருக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தூதரகங்கள், கன்ஸியூலர் அலுவலகங்கள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடு திரும்புவதற்கு எதிர்பார்த்துள்ளவர்களை அழைத்துவரும் நோக்கத்துடன், சம்பந்தப்பட்ட நாடுகளுடன் இராஜதந்திர பேச்சுவார்த்தைகளை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெளிநாடு சென்ற இலங்கையர்களில் 52 ஆயிரம் பேர் திருப்பி அழைத்து வரப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய கிழக்கு, தென் ஐரோப்பிய நாடுகளுடன், ஜப்பான், கொரியா, மலேசியா, சிங்கப்பூர் முதலான நாடுகளிலும் பத்து லட்சத்திற்கு மேற்பட்ட இலங்கையர்கள் வேலை



செய்கிறார்கள்.

தம்மை முறையாக பதிவு செய்து கொள்ளாத ஐந்து லட்சம் பேர் வரை வெளிநாடுகளில் வேலை செய்து வருவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# புதிய கொரோனாவுக்கு எதிராக விசேட நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

பிரித்தானியாவில் இனங்காணப்பட்டுள்ள புதிய கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக துறைமுக அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் தயா ரட்நாயக்க தெரிவிக்கையில், நாட்டின் சகல துறைமுகங்களிலும் சுகாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

அதேவேளை, விமான நிலையங்களிலும், சகல நடவடிக்கையும் சுகாதார விதிமுறைகளின்படி முன்னெடுக்கப்படுவதாக விமான நிலைய மற்றும் விமான சேவை நிறுவனத் தலைவர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இதேவேளை இங்கிலாந்தில் கண்டறியப்பட்டுள்ள புதிய கொரோனா வைரஸ் இலங்கையிலும் பரவுவதற்கான வாய்ப்பு இருப்பதாக தொற்றுநோயியல் பிரிவின் பிரதானி வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். அதிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான முழு பொறுப்பும் மக்களையே சாரும் என அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## மேல் மாகாணத்தில்

# ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்ப வர்த்தமானி விரைவில்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்புக்கான நடைமுறை குறித்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும் என மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ஆட்சேர்ப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான நேர் முகப் பரீட்சையை தொடர்ந்து புதிய நியமனங்கள் வழங்கப்படும் என மேல் மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக நேற்று தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளியாகும் என குறிப்பிட்டார்.

மேல்மாகாணத்தில் அனைத்து பாடங்களிலும் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் அதிகம் உள்ளன என்றும் மேல் மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக தெரிவித்துள்ளார். (ஜ)

# ஹிக்கடுவை கடற்கரையில் இரட்டைத்தலை கடல் ஆமை



(கொழும்பு)

ஹிக்கடுவை திராணகம கடற்கரையில் இரண்டு தலைகளை கொண்ட கடல் ஆமை குஞ்சு ஒன்று நேற்று பிரதேச வாசிகளுக்கு கிடைத்துள்ளது.

இந்த கடற்கரைக்கு வந்து முட்டை இட்ட கடல் ஆமையின் முட்டை பொரித்து குஞ்சுகள் வெளியாகி கொண்டிருந்த போது, அந்த ஆமை குஞ்சுகள் இடையில் இந்த இரட்டை தலை ஆமை குஞ்சு இருந்துள்ளது. இந்த ஆமை குஞ்சுக்கு ஆறு கால்கள் மற்றும் இரண்டு தலைகள் காணப்படுகின்றன.

அரிய வகையான இரட்டை தலை ஆமை குஞ்சை பிரதேச வாசிகள் ஹிக்கடுவை வனஜீவராசிகள் அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர். (ஜ-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2192

### பவித்திரா




### மாதவி




### விதுர்ஷா




### ஈசன்




### ராகுல்




### சாதனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தேர்தல்களில் சுதந்திரக் கட்சி தனித்து களமிறங்கும்

## மைத்திரி எச்சரிக்கை



(கொழும்பு)

ஆளும் கூட்டணியால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு உரிய ஒதுக்கீடுகள் வழங்கப்படாவிட்டால் தமது கட்சி தனித்து களமிறங்கும் என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். பாராளுமன்றத் தேர்தலின் போது தமது கட்சி பாரிய அநீதியை எதிர் கொண்டது.

இந்த அநீதி மாகாணசபை தேர்தலிலும் தொடருமானால் கட்சிக்கு கீழ்நிலை உறுப்பினர்கள் மத்தியில் பிரச்சினைகள் தோன்றக் கூடும்.

மாகாணசபை தேர்தல்கள் முன்கூட்டியே நடத்துவதா? அல்லது புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த பின்னரே அதனை நடத்த வேண்டுமா? என்பது தொடர்பில் அரசாங்கம் விவாதித்து வருகிறது.

இந்நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் நுவரெலியா, கம்பஹா உட்பட்ட பல இடங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆளும் கூட்டணியினால் அநீதி இழைக்கப்பட்டதாகவும் அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (ஜ-4)

# 500 சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி

(கொழும்பு)

முழுமையாக சுகாதார ஒழுங்கு விதிகளின் கீழ் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் 500 சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அசேல குணவர்த்தன இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 2021 ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் திகதி முதல் ஒரு பரீட்சார்த்த திட்டத்தின் கீழ் 12 இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்கீழ் ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து சுமார் 500 சுற்றுலாப் பயணிகள் அழைத்து வரப்படவுள்ளனர்.

இந்த நிலையில் இந்த பரீட்சார்த்த திட்டம் பயனளித்தால், சுற்றுலாவுக்கு நாட்டை மேலும் திறக்க வழிகாட்டுதல்களில் திருத்தம் செய்யலாமா? என்பதை தீர்மானிக்க ஒரு ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# சாரதிகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாத மற்றும் உரிய வயதெல்லையை பூர்த்தி செய்யாதவர்களுக்கு வாகனங்களை செலுத்துவதற்கு அனுமதி வழங்கும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதன்போது, குற்றம் நிரூபிக்கப்படும் நபர்களுக்கு சிறைத் தண்டனை அல்லது 25 ஆயிரம் ரூபாய் வரை அபராதம் அறவிடுவதற்கும் அனுமதி உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சோதனை நடவடிக்கைகளின் போது சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாமல், உரிய வயது எல்லையை பூர்த்தி செய்யாமல் வாகனங்களை செலுத்திய பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற நபர்களுக்கும் வாகனங்களை வழங்கிய நபர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு சிறைத் தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கும் அல்லது 25 ஆயிரம் ரூபாய் வரை அபராதம் அறவிடவும் அனுமதியுள்ளது.

அதனால் இதுபோன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இறைவன் இருக்கும் இடம்!

காஞ்சிபுரத்திலே பல்லவராஜா, ஒரு கோயில் கட்டினார். கைலாசநாதர் கோயில். அதற்குக் கும்பாபிஷேகம் செய்வதற்கு ஒருநாள் குறிப்பிட்டு..அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்தார்.முதல் காரியமாக கடவுளை வேண்டினார்.நீங்கள் இந்தக் கும்பாபிஷேகத்திற்கு நேரிலே வந்து கலந்து கொள்ள வேண்டும்..என்று கடவுள் அந்த ராஜா கனவிலே வந்தார்.

நீ கும்பாபிஷேகம் வைத்திருக்கின்ற அதே நாளிலே அதே நேரத்திலே எனக்கு இன்னொரு ஊரிலே ஒரு கும்பாபிஷேகம் இருக்கின்றது. அதற்குப் போகவேண்டும். அதாவது திருநின்றவூரிலே என்னுடைய பக்தர் ஒருத்தர். அவரும் ஒரு கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்கின்றார். நான் அதற்குப் போக வேண்டியிருக்கின்றது. அதனால் உன்னுடைய திகதியை நீ மாற்றி வைத்துக்கொள் என்றார்.

கடவுள் தான் எங்கும் இருக்கிறவராச்சே..அவர் நினைத்தால் இரண்டு இடத்திலேயும் இருந்து கோயில் கும்பாபிஷேகம் நடத்த முடியாதா?

ஏன் அப்படி செய்யவில்லை?

ஒரு முக்கியமான காரணத்துக்குத் தான். திருநின்றவூரிலே இருந்த பூசலார் என்கின்ற அந்த அடியாரின் பெருமையை இந்த உலகத்திற்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்பதற்காகத்தான் கடவுள் அந்த ராஜாவிடம் அப்படிச் சொன்னார்.

சரி... அந்த அடியார் அப்படி என்ன தான் பெரிதாக கோயில் கட்டிவிட்டார்? ராஜா கட்டிய கோயிலை விடப் பெரிதா?

அவர் கட்டியது கருங்கல்லாலேயோ..மண்ணாலேயோ மரத்தாலேயோ கட்டிய கோயில் இல்லை.

அது மனதாலே கட்டிய கோயில் –மனதுக்குள்ளே இருக்கின்ற கோயில்..மனக்கோயில்.

அந்த அடியார் தன்னுடைய மனதுக்குள்ளே மாதக் கணக்காக ஒவ்வொரு கல்லாக சேர்த்துக் கட்டிய கோயில். இந்த விடயம் ராஜாவுக்குத் தெரியாது. அவர் என்ன நினைத்துவிட்டார். அது நாம் கட்டிய கற்கோயில் மலையை விட பெரிதாக இருக்கும் போல இருக்கின்றது என்று. சரி அப்பேற்பட்ட அந்தக் கோயிலைத் தரிசனம் செய்துவிட்டு வருவோம் என்று நினைத்து ராஜா திருநின்றவூருக்குப் போகின்றார். அங்கே போய் பார்த்தால் கோயிலையும் காணோம்..ஒன்றையும் காணோம்.

கடைசியில் பூசலார் கட்டிய மனக்கோயில் தான் அது என்பதைப் புரிந்து கொள்கின்றார் ராஜா. உடனே அந்த அடியாரின் காலிலே விழுந்து வணங்குகின்றார். அவரோ இது மனதாலே முயன்ற கோயில்..இதற்கு இத்தனை பெருமையா? என்று ஆச்சரியப்படுகின்றார்.

இதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை..ஆண்டவன் விரும்புவது அக பக்தியையே தவிர–புறத் தோற்றங்களை அல்ல..

இதை நாம் புரிந்து கொண்டோம் என்றால் நமக்குள்ளே எந்த வேறுபாடுகளும் வருவதற்கு வழியே இல்லை.

இன்னொரு ராஜா இருந்தார். அவர் ஆண்டவனுக்குப் படைக்கிறதற்காக ஒருவர் நல்ல செவ்வாழைப் பழமாக பார்த்து வாங்கிக்கொண்டு வரச் சொன்னார் வேலைக்காரனிடம்.

வேலைக்காரன் போனான். கடைத் தெருவிலே ஒருத்தர் பழம் வாங்கினான். வருகின்ற வழியில் அவன் குடிசை. அப்படியே எட்டிப் பார்த்துவிட்டுப் போவோம் என்று நினைத்தான். போனான். அங்கே இவனுடைய குழந்தை பாவம் பசியாலே கத்திக் கொண்டிருந்தது.

இவன் பார்த்தான்..இவ்வளவு பெரிய தாரிலே ஒரு இரண்டு பழம் எடுத்தால் தெரியவா போகின்றது என்று நினைத்து இரண்டை பிய்த்து அந்த குழந்தையிடம் கொடுத்தான். அது அதை வாங்கி வயிறாரச் சாப்பிட்டது. பசி அடங்கியது. விளையாடப் போய்விட்டது.

இவன் அதன்பின்பு வாழைப்பழத்தை எடுத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்தான். இரண்டு பழம் பிய்த்திருந்தது ராஜாவுக்குத் தெரிந்து போய்விட்டது. இவன் உண்மையை சொல்லிவிட்டான்.

உடனே ராஜா கடவுளுக்குப் படைக்க வேண்டிய பொருளை குழந்தை எச்சில் செய்ய விட்டிருக்கின்றாயே..என்று சொல்லி அவனை கட்டி வைத்து சாட்டையாலே அடித்தார். பாவம்.

மறுநாள் பழத்தை கோயிலுக்கு எடுத்துக்கொண்டு போனார். கடவுள் முன்னால் வைத்தார். கடவுள் கண்ணைத் திறந்து பார்த்தார். பழம் எல்லாம் அழுகியிருந்தது.என்ன இது அழுகிப் போன பழம் என்றார்.ராஜா முழித்தார். நல்லாத்தானே இருந்தது என்று நினைத்தார். அப்பொழுது கடவுள் அந்த ராஜாவிடம் சொன்னாராம். இதோ பாரப்பா இந்த தாரிலே இரண்டு பழம் தான் நல்ல பழம் .அந்த இரண்டு பழங்களையும் நேற்றே நான் சாப்பிட்டேன் என்றார்.அப்பொழுது தான் ராஜாவுக்குப் புரிந்தது.

ஏழைக் குழந்தையின் பசியைத் தீர்க்க உதவிய அந்த இரண்டு பழம் தான் இறைவன் சாப்பிட்ட பழம் என்று..இறைவன் இருக்கின்ற இடம் எது? இது தான்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?



30

## கலாநிதி க.தவலிங்கம்

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

3.விண்ணப்பிக்கும் போது, பாராளுமன்றத்தை பார்வையிட எதிர்பார்க்கும் திகதி, நேரம், சமுகமளிக்கும் ஆட்களின் எண்ணிக்கை, விண்ணப்பதாரியின் முகவரி ஆகிய விபரங்களையும், சமுகமளிப்போரின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். தொலைபேசி இலக்கங்கள், தொலைநகல் இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் வசதிகள் இருப்பின் அம்முகவரி (ஈமெயில்) ஆகிய விபரங்களையும் சமர்ப்பிபதன் மூலம் விண்ணப்பங்கள் சார்பில் துரிதமாக அனுமதிப்பத்திரங்களை அனுப்புவதற்கு வசதியாக இருக்கும். பாடசாலை மாணவர்களுக்காக விண்ணப்பிக்கையில் ஏற்புடைய தரங்களை குறிப்பிடுதல் வேண்டும்.

4.வாரத்தின் சகல கடமை நாட்களிலும் மு.ப.9.00 மணி முதல் பி.ப. 3.30 மணிவரையிலும், பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறும் நாட்களில் பிற்பகல் 3.30 மணியைக் கடந்து பாராளுமன்ற அமர்வுகள் நிறைவு பெறும் வரையிலும் பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்காக அனுமதி வழங்கப்படுகின்றது. வார இறுதி நாட்கள் (சனிக்கிழமை/ஞாயிற்றுக்கிழமை) அல்லது போயா விடுமுறை நாட்கள் அல்லது ஏனைய அரசாங்க விடுமுறை நாட்களில் பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்காக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. மேலும் சிறப்பு விருந்தினர்களுக்காக பொது மக்கள் பார்வையாளர் கூடங்கள் மட்டுப்படுத்தப்படும் தினங்களிலும் பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் பிரகாரம், ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது ஞாயிற்றுக் கிழமையை அடுத்து வரும் வாரத்தில் ஆரம்பித்து, அவ்வாரத்தின் செவ்வாய்க் கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய நாட்கள் என்றவாறு, ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது மற்றும் மூன்றாவது வாரங்களில் பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறும். எனினும், அவ்வப்போது மேற்கொள்ளப்படும் தீர்மானங்களின் பிரகாரம், மேற்குறிப்பிட்ட தினங்களில் அமர்வுகளை நடத்தாமல் விடுவதற்கும் அல்லது வேறு தினங்களில் அமர்வுகளை நடத்துவதற்கும் வாய்ப்புள்ளது.

பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்காக வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்களை முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்வதற்கான சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் இயலுமானவரை அது குறித்து உரிய தரப்பினருக்கு அறிவிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

செவ்வாய்க்கிழமை மற்றும் புதன் கிழமை ஆகிய நாட்களில் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணி வரையிலும், வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 7.30 மணி வரையிலும் பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறும். எனினும், பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானிக்கும் பட்சத்தில் அமர்வு இடம்பெறும் நேரங்கள் அவ்வப் போது மாற்றமடையலாம்.

5.பாராளுமன்றத்தில் தற்போது அமுலில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளின்படி பார்சல்கள், கைப்பைகள், பிரீப்கேஸ், பயணப்பைகள், புத்தகங்கள், ஆவணங்கள், பேனைகள், பென்சில்கள், மழை அங்கிகள், குடைகள், புகைப்படக் கருவிகள், செல்லிடத்தொலைபேசிகள், மின்னியல் அல்லது இலத்திரனியல் சாதனங்களும் துணைக்கருவிகளும், சிகரெட், புகையிலை, வெற்றிலை, புகைக்குழல், உணவு வகைகள் மற்றும் தொப்பிகள் போன்றவற்றையும் மேலும், மேற்குறிப்பிட்ட பொருட்களுக்கு மேலதிகமாக கலரிக்குள் எடுத்துச் செல்லக்கூடாதென தீர்மானிக்கப்படக்கூடிய/ கருதப்படக்கூடிய எதையாவது நீங்கள் வைத்திருந்தால் அவற்றையும் கலரிக்குள் எடுத்துச் செல்ல இடமளிக்கப்படமாட்டாது.

எனவே, அத்தகைய பொருட்களை எடுத்து வருவதைத் தவிர்த்துக் கொள்க. அத்தகைய பொருட்களெதுவும் உங்கள் வசமிருப்பின் அவற்றை நீங்கள் வருகை தந்த வாகனத்தில் வைத்து விட்டு வரவும்.

6. முறையான உடைகளை அணிந்து வராதவர்கள் (அதாவது, கட்டைக் காற்சட்டை, கையற்ற ஸ்கினி போன்ற பொருத்தமற்ற ஆடைகள்) பாராளுமன்ற வளவுக்குள்/கலரிக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனவே பொதுமக்கள், கலரிக்கு வருகை தருபவர்கள் முறையாக உடையணிந்து வருகைதர வேண்டும்.

7. பாராளுமன்ற அமர்வுகளைப் பார்வையிட வருகின்ற பாடசாலை மாணவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றபோது ஐந்தாம் ஆண்டு (05) மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படுமென்பதோடு, அமர்வுகள் இடம்பெறாத நாட்களில் இந்நிபந்தனை அமுல்படுத்தப்பட மாட்டாது. பாராளுமன்ற அமர்வு இடம்பெறுகின்ற காலப்பகுதியில் பாராளுமன்ற கலரிக்கு கைக்குழந்தைகளையும், சிறு குழந்தைகளையும் கொண்டுசெல்ல அனுமதி வழங்கப்படமாட்டாதென்பதால் அத்தகைய பிள்ளைகளை கலரிக்கு அழைத்துச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சிறிய பிள்ளைகளையும், சிறிய பாடசாலைப் பிள்ளைகளையும் கலரியின் முதல் வரிசையில் அமர்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

8.மேற்படி 2வது பந்தியின் பிரகாரம் பாராளுமன்றத்தை பார்வையிட வருபவர்களின் வாகனங்களை பாதுகாப்புக் காரணங்களின் நிமித்தம் பாராளுமன்ற வளவிற்குள் அனுமதித்தல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் வருபவர்களின் வாகனத்தை பாராளுமன்ற வளவிற்குள் செலுத்துவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பாராளுமன்றத்தைப் பார்வையிட வருபவர்களின் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக பாராளுமன்ற வளவின் முன்புறத்தில் விளையாட்டு மைதானத்துக்கு மறுபுறமுள்ள சிற்றுண்டிச்சாலை அமைந்துள்ள நிலப்பகுதியில் தாபிக்கப்பட்டுள்ள வாகனத்தரிப்பிடத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளமையால் வாகனத்தை அங்கு நிறுத்தலாம்.

9.மேற்படி நிலப்பகுதியில் வாகனத்தை நிறுத்திய பின்னர் குழுவினர் (பாடசாலைச் சீருடையுடன் வருகை தருகின்ற மாணவர்கள் உள்ளடங்கிய குழுக்கள் தவிர) பிரதான வீதியைக் கடந்து பாராளுமன்றத்தின் பிரதான வாயிலினூடாகப் பிரவேசித்து ஜயந்திபுர பாதுகாப்புச் சோதனைச்சாவடிப் பிரிவிற்குச் செல்லவேண்டும்.

10. ஜயந்திபுர பாதுகாப்பு சோதனைச் சாவடிப் பிரிவில் கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் உங்கள் கைவசமுள்ள அனுமதிப் பத்திரத்தைக் காட்டிய பின்னர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கூடத்திற்குச் சென்று உங்களை உள்ளடக்கிய குழுவினர் வந்துள்ளமையை அவர்களிடம் அறிவிக்கவும். அவர்களின் பதிவேடுகளில் உங்களை உள்ளடக்கிய குழுவினர் வருகை தந்தமை தொடர்பான குறிப்புக்கள் பதியப்பட்ட பின்னர் ஜயந்திபுர பாதுகாப்புச் சோதனைப் பிரிவுக்கு அருகிலிருந்து பாராளுமன்றக் கட்டடம் வரை வருவதற்கான பாராளுமன்ற பேருந்து பாதுகாப்பு உத்தியோகத்தர் வரவழைத்துத் தருவார். மேற்படி **2(iii)** பந்தியின் பிரகாரம் பாராளுமன்றத்தைப் பார்வையிட வருகின்றவர்களுக்கு இப் பிரிவின் மூலம் பாராளுமன்றத் தொகுதியினுள் பிரவேசிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

11. பாராளுமன்றத்திற்கு வருகின்றவர்கள் அனைவரும் பாதுகாப்புச் சோதனைக் குட்படுத்தப்படுவர். அதற்கிணங்க, ஜயந்திபுர பாதுகாப்பு சோதனைப் பிரிவில் வைத்து உங்களை உள்ளடக்கிய குழுவினர் பாதுகாப்புச் சோதனைக் குட்படுத்தப்படுவதால் உடற்பரிசோதனைக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமளிக்க வேண்டும்.

12. மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் உங்களின் வாகனத்தை ஜயந்திபுர சோதனைச்சாவடிப் பிரிவில் அமைந்துள்ள இடம்வரை ஓட்டிவர வாய்ப்பளிக்கப்படுவதுடன், வருகைதந்த குழுவினரை அவ்விடத்தில் இறக்கிவிட்டு வாகனத்தை முன்னர் குறிப்பிட்ட சிற்றுண்டிச்சாலை அமைந்துள்ள நிலப் பரப்பில் நிறுத்திவைக்க வேண்டும்.

13. உடற்பரிசோதனையின் பின்னர் உங்களுக்காக வந்துள்ள பாராளுமன்ற பேருந்து மூலமாகப் பாராளுமன்றக் கட்டடத்தின் பொதுமக்கள் நுழைவாயில் வரை பயணம் செய்யவும். நடந்து செல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்பதோடு வழங்கப்பட்ட பேருந்து மாத்திரம் பயணம்செய்ய வேண்டும்.

14. பொதுமக்கள் நுழைவாயிலின் அருகில் பேருந்தில் இருந்து இறங்க வேண்டுமென்பதோடு அவ்விடத்தில் கடமையிலீடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் உங்களைக் கட்டடத்திற்குள் பிரவேசிப்பதற்கான நுழைவாயிலை நோக்கி ஆற்றுப்படுத்துவார்கள்.

15. மேற்குறிப்பிட்ட நுழைவாயில் அருகில் நீங்கள் மீண்டும் உடற்பரிசோதனைக்குட்படுத்தப்படுவதால் ஆண்கள் வலது பக்கத்திலும் பெண்கள் இடது பக்கத்திலுமாக இரண்டு வரிசையாக அணிவகுத்து நிற்பின் பரிசோதிக்கும் பணிகளுக்கு இலகுவாக இருக்கும். அத்துடன் உங்கள் குழுவின் தலைவர் அவருடைய தேசிய அடையாள அட்டையையும் படைக்கலச் சேவிதரால் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அனுமதிப்பத்திரத்தையும் அவ்விடத்தில் கடமையிலீடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

16. பொதுமக்கள் நுழைவாயிலினூடாக உங்களுக்குப் பாராளுமன்றக் கட்டடத்திற்குள் பிரவேசிக்க முடியும். அத்துடன் மேற்குப் பக்கத்து ஏறுபாதை ஊடாக பொதுமக்கள் கலரிவரை செல்வதற்கு அனுமதி வழங்கப்படும். பாராளுமன்ற பொலிஸ் உத்தியோகத்தர்களும் பாராளுமன்றப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் அவ்வழியில் உங்களை அனுப்புவார்கள். அதைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்க. கலரிக்கான நுழைவாயிலுக்குப் பக்கத்தில் மீண்டும் நீங்கள் உடற்பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுவீர்கள் என்பதோடு அதற்கு உங்களது ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும்.


17. ஏறுபாதை ஊடாகச் செல்கின்ற போது குறிப்பாக உங்களுடன் வருகின்ற பாடசாலைப் பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளும் அடக்கமாக கவனமாக செல்வதை நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்.

18.பொதுமக்கள் கலரியில் இருந்தாலும் கட்டடத்திற்குள் எந்தவொரு இடத்தில் இருந்தாலும் பூரண அமைதியைப் பேண வேண்டும். நிறுவன பணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அமைதியாக இருக்கின்றனரென்பதையும் பண்புடன் நடந்து கொள்கின்றனரென்பதையும் பொதுமக்கள் கலரியிலும் நிறுவனத்திலும் உள்ள காது கருவிகளுக்கும் வேறு உபகரணங்களுக்கும் சேதம் ஏற்படாத வகையில் நடந்து கொள்கின்றன ரென்பதையும் நீங்கள் கவனித்துக்கொள்ள வேண்டும். (தொடரும்)

# தடுப்பூசிகள் கொள்வனவிற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி கடன்

(கொழும்பு)

கொரோனா வைரஸிற்கான 25 மில்லியன் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கடன் வழங்கப்பட்டுள்ளது.



84 மில்லியன் அமெரிக்க டொலரை கொண்ட முதலாவது தவணையை வழங்குவதற்காக, நிதி அமைச்சு மற்றும் அபிவிருத்தி வங்கிக்கு இடையில் ஆவணங்கள் பரிமாறப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் உறுதிப்படுத்தினார்.

தேவைக்கேற்ற வகையில் இந்தத் தொகையை 200 மில்லியன் டொலர் வரை அதிகரிக்க முடியும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. (ஐ-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## திருநீறு எனும் மேலான செல்வம்

திருநீறு பரம்பொருளான சிவபெருமானால் உருவாக்கப்பட்டது. இதில் பஞ்சபூதங்களும் அடங்கியுள்ளன. எனவே திருநீறைப் பெறும் போதும் பூசிக்கொள்ளும் போதும் வீட்டில் வைத்திருக்கும் போதும் அதன் மகிமையை உணர்ந்து அதற்குரிய சிறப்பைக் கொடுக்க வேண்டும்.

கோவிலில் விபூதியை வாங்கும் போது வலது கையை மட்டும் நீட்டி வாங்கக் கூடாது. வலது கையின் கீழ் இடது கையை வைத்து பவ்வியமாக நின்று பெற வேண்டும்.

திருநீறு வாங்கியதும் 90 சதவீதம் பேர் உடனே அந்த விபூதியை இடது கையில் கொட்டி மறுபடியும் அதில் இருந்து எடுத்துப் பூசுகிறார்கள். இது தவறானது. விபூதி விதிமுறைகளுக்கு எதிரானது. திருநீறு வாங்கியதும் அதை அப்படியே நெற்றியில் பூசிக் கொள்வது நல்லது. வலது கை மத்தியில் உள்ள விபூதியை அப்படியே மோதிர விரலால் தொட்டு நெற்றியில் பூசிக் கொள்ளலாம்.

அப்படி பூசிக் கொள்ள முடியாத பட்சத்தில் ஒரு சிறு தாளில் திருநீறைக் கொட்டி அதிலிருந்து எடுத்து பூசிக் கொள்ளலாம். கோவிலில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும்போது சிலருக்கு திருநீற்றைப் பெற முடியாமல் போகலாம்.

அத்தகையவர்கள் வயதில் தம்மை விட இளையவர் கைகளில் இருந்து விபூதியை எடுத்துப் பூசக்கூடாது. விபூதியை எடுத்துக் கையில் இடச் செய்து அதில் இருந்தே எடுத்துப் பூச வேண்டும்.

ஆனால் குங்குமத்தை இளையவர் கைகளில் இருந்து எடுத்துப் பூசிக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

திருநீறு பூசும்போது குல தெய்வத்தை நினைத்தபடி பூசுவது மிக மிக நல்லது. இல்லையெனில் ஓம் நமசிவாய, சிவாய நம, முருகா என்று கடவுள்கள் பெயரைச் சொல்லிப் பூச வேண்டும்.

ஒருபோதும் நடந்து கொண்டே திருநீறு பூசாதீர்கள். ஒரு இடத்தில் நின்று தலை நிமிர்ந்து திருநீறு தரையில் விழாதபடி பூசுதல் வேண்டும். திருநீறு நம் காலடி படும் இடங்களில் சிதறும் வகையில் பூசுவது பெரும் பாவமாகி விடும். எனவே திருநீறு பூசும் போது கவனம் வேண்டும்.

தலை உயர்த்தி திருநீறு பூசும்போது முழுமையாக கண்களை மூடக்கூடாது. அரைக்கண் பார்வை இருக்க வேண்டும்.

நமது உடலில் இருக்கும் ஆதாரங்களான சக்கரங்கள் உள்ள இடங்களில் திருநீறு பூசினால் அளவற்ற நன்மைகள் உண்டாகும். மார்பில் பூசப்படும் திருநீறு தெய்வீக அன்பை தேடிக்கொடுக்கும். தொண்டைக்குழியில் பூசும் திருநீறு நமக்குள் இருக்கும் சக்தியை அதிகரிக்கும். புருவங்களின் மத்தியில் தினமும் பூசும் திருநீறு வாழ்வின் ஞானத்தைத் தேடித்தரும்.

திருமணம் ஆகாத பெண்கள் கழுத்துப் பகுதியில் விபூதியை பூசிக் கொண்டால் உடனே திருமண பாக்கியம் தேடி வரும் என்பது ஐதீகமாகும்.

விபூதியை வைக்கும் பாத்திரத்தில் விபூதியுடன் தாழம்பூ, செண்பகம், படாலி, துளசி, மல்லிகை, கதிர்பச்சை ஆகியனவைகளை கலந்து பரிமள விபூதியாக அணிந்தால் சகல செல்வமும் கிடைக்கும் என்று சிவசம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது. விபூதி என்பதற்கு காப்பு என்றும் ஒரு பொருள் உண்டு. அது போல திருநீறு என்பதற்கு ருத்ரபஸ்மம் என்று ஒரு அர்த்தம் உள்ளது. ருத்ரர்களால் பாவம் சம்ஹாரம் செய்யப்பட்டு தூய்மை அடைந்துள்ளது என்று இதற்கு அர்த்தமாகும்.

இத்தகைய சிறப்புடைய திருநீறை நெற்றியில் பூசுவதற்கு அறிவியல் ரீதியாகவும் ஒரு நன்மை இருப்பதாகக் கூறப்படுகிறது.

அதாவது நெற்றியானது நமது உடலில் வெப்பத்தை அதிகமாக வெளி யிடும் பகுதியாகவும் உள் இழுக்கும் பகுதியாகவும் உள்ளது. நாம் திருநீறு பூசி இருந்தால் வெப்பம் உள்ளிழுக்கப்படும்போது நமது உடல் வாகுக்கு ஏற்ப வெப்பத்தை உடலுக்குள் அனுப்பும் அற்புதமான வேலையை திருநீறு செய்கிறது. இதை மேலை நாட்டு விஞ்ஞானிகள் ஆய்வுகள் நடத்தி ஒப்புக்கொண்டுள்ளனர். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## கொரோனா நோயாளி தப்பியோட்டம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளான 22 வயது இளைஞன் ஒருவர் தப்பியோடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சப்புகஸ்கந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகொல பகுதியில் தனது வீட்டிலிருந்த நிலையிலேயே அவர் தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறு தப்பியோடிய இளைஞன் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் எனவும் இவர் தொடர்பில் தகவல் அறிந்தால் அறியத்தருமாறும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஐ-4)

## விவசாயிகளுடன் ஜனாதிபதி



(அநுராதபுரம்)

சேனா படைப்புழு தாக்கத்தினால் சோளப் பயிர்ச் செய்கைக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து விவசாயிகளிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கேட்டறிந்தார்.

நேற்று முன்தினம் அநுராதபுரம் எலே பத்துவ பஹலகவுக்குச் சென்றபோது கேட்டறிந்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக படைப்புழு அச்சுறுத்தலால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டும் படைப்புழுத் தாக்கத்தினால் பல மாவட்டங்களில் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்பார்க்கப்படும் விளைச்சல் அதிகளவு குறைந்துள்ளது என்று விவசாயிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

காட்டு யானைகளினால் தோட்டங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் குறித்தும் விவசாயிகள் ஜனாதிபதிக்கு விளக்கமளித்தனர். (ஐ-4)

## பள்ளத்தில் பாய்ந்த ஜீப்



(கொழும்பு)


பண்டாரவளையிலிருந்து பதுளை நோக்கி பயணித்த ஜீப் வாகனம் ஒன்று தெமோதரை நீர்த்தேக்கத்துக்கு அருகாமையில் வீதியை விட்டு விலகி 60 அடி பள்ளத்தில் உள்ள ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில், சிறிது காயங்களுடன் ஜீப் வாகன சாரதி தப்பித்துள்ளார்.

விபத்து தொடர்பில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-4)




# அதிர்ஷ்டமான மனிதன்



முல்லா ஓர் நாள் இரவு தன் மனைவியுடன் சேர்ந்து உணவுசாப்பிட்டு கொண்டிருக்கும் போது வீட்டு சுவரின் அருகே ஏதோ ஒரு சத்தம் கேட்டது.

முல்லா என்ன சத்தம் என்று பார்த்துவர கையில் வேட்டை துப்பாக்கியுடன் தோட்டத்திற்கு சென்று பார்த்தார். தோட்டத்தில் வெள்ளையாக ஏதோ அசைந்து கொண்டிருப்பதை பார்த்து துப்பாக்கியை எடுத்துச் சுட்டார்.

அதன் பிறகு, காலையில் எழுந்தவுடன் முல்லாவும், அவரது மனைவியும் தங்களின் தோட்டத்திற்கு சென்று பார்த்தனர். அங்கு முல்லாவின் மனைவி தனது மிகச் சிறந்த சட்டையை துவைத்து மரத்தில் காயப்போட்டிருந்ததைப் பார்த்தார்கள். உடனே முல்லாவின் மனைவி, இது உங்களின் அதிர்ஷ்டமான சட்டையாச்சே! அட அதிர்ஷ்டம் கெட்டவரே! உங்களின் மிகச் சிறந்த சட்டையை நாசமாக்கி விட்டீரே! என்று முல்லாவின் மனைவி மிகவும் வேதனைப்பட்டார்.

அதற்கு முல்லா, இல்லை. நானே பூமியில் அதிர்ஷ்டமான மனிதன். நான் காலையில் அந்த சட்டையை அணிந்து கொள்ளலாம் என்று நினைத்தேன்.

ஒரு வேளை நான் அந்த சட்டையை போட்டு கொண்டிருந்தால், உறுதியாக நான் கொல்லப்பட்டிருக்கலாம் என்றார்.

**நீதி : எது நடந்தாலும் நம்முடைய நல்லதுக்குத்தான் என நினைக்க வேண்டும்.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## கலங்க வைத்த கிரானிகஸ் யுத்தம்

படையைத் திரட்டிக் கொண்டு பாரசீகத்துக்குப் புறப்பட்டு விட்டால் இங்கே மாசிடோனியாவை யார் காப்பாற்றுவது? எதிரிகள் உள்ளே நுழைந்தால் எவ்வளவு அவமானமாகிவிடும்? அலெக்சாண்டர் யோசித்தார்.

சொந்த நாட்டுக்கு ஒரு பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும். வெளியூரை வளைக்கப் போகும் போது, உள்ளூர் கொள்ளை போய்விடக்கூடாது. அதற்குச் சரியான பாதுகாவலரை நியமிக்க வேண்டும்.

மன்னர் பிலிப் பைஸாண்டியப் போரில் கலந்து கொண்ட போது மாசிடோனியாவில் நான் இருந்து நாட்டைப் பாதுகாத்தது போல தற்போது இன்னொரு தலைவன் தேவை என்று மூளையைக் கசக்கிக் கொண்டிருந்தார் அலெக்சாண்டர்.




கூப்பிடுங்கள் ஆண்டிபேட்டரை. அலெக்சாண்டரிடம் இருந்து அதிர்ந்து வெளியே வந்தது குரல்.

ஓட்டமும் நடையுமாக வந்து நின்றார் ஆண்டிபேட்டர். இவர் மாசிடோனியப் படையில் முக்கியமான தளபதி, திறமையாளர், தேர்ந்த நிர்வாகி, பிலிப்பின் நம்பிக்கைக்குரியவர், பழுத்த அனுபவஸ்தர், கை சுத்தமானவர்.

எல்லாமே பிலிப் அவ்வப்போது சொல்லி வந்த தகவல்கள்தான். இப் போது சரியான தருணத்தில் அலெக்சாண்டரின் நினைவுக்கு வந்தன. அன்புமிக்க ஆண்டிபேட்டர். உங்களிடம் பன்னிரெண்டாயிரம் வீரர்களை ஒப்படைக்கிறேன். ஆயிரத்து ஐந்நூறு குதிரைப் படைகளும் உண்டு. அவற்றை வைத்துக்கொண்டு மாசிடோனியாவைப் பொறுப்புடன் பார்த்துக்கொள்ள வேண்டும். நான் ஆசியாவைக் கைப்பற்றப் புறப்படுகிறேன்.

எதிரிகளை அழித்து மாசிடோனியாவைக் காப்பது மட்டும் உங்களுடைய பணி அல்ல. புதிய எதிரிகள் உருவாகாமல் பார்த்துக் கொள்வதும்கூட உங்கள் பணிதான்.

மாசிடோனிய மக்களுக்கு எந்தவிதமான குறையும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதைச் செய்யுங்கள், இதை மட்டும் செய்யுங்கள் அது போதும்.

(தொடரும்)

செய்ய முடிந்தவன் சாதிக்கின்றான்.
செய்ய முடியாதவன் போதிக்கின்றான்.
– பெர்னாட்ஷா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சந்தைகளை மூடிவிட ஊரெல்லாம் சந்தையாயிற்று...

மருதனார்மடம் சந்தை வர்த்தகர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதையடுத்து, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாக் கொத்தணி உருவாயிற்று.

கொரோனாத் தொற்றுப் பரவுவதை தடுப்பதில் சுகாதாரத் திணைக்களம் அதிரடியாக மேற்கொண்ட நடவடிக்கைகளை இங்கு பாராட்டித்தானாக வேண்டும்.

இதற்கு மேலாக, வடக்கு மாகாண ஆளுநரும் சுகாதாரத் திணைக்களத்தின் ஆலோசனைகளை அமுலாக்குவதற்குப் பூரண ஆதரவு வழங்கியமை சுட்டிக் காட்டப்பட வேண்டிய விடயம்.

இவை ஒருபுறமிருக்க, மருதனார்மடம் சந்தையில் கொரோனாத் தொற்று ஏற்பட்ட காரணத்தாலும் சந்தை வர்த்தகர்களிடையே மேற்கொண்ட பிசிஆர் பரிசோதனையில் சிலருக்குக் கொரோனாத் தொற்று என்ற முடிவுகள் கிடைக்கப் பெற்றதனாலும் மறு அறிவித்தல் வரும் வரை வட பகுதியில் உள்ள சந்தைகளை மூடிவிடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சந்தைகளில் மக்கள் கூட்டமாகச் சேரும் போது கொரோனாத் தொற்று வேகமாகப் பரவும் என்பதனால் அப்படியொரு முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால் சந்தைகள் மூடப்பட்டதேயன்றி, சந்தையின் வெளிப்பகுதிகளிலும் இதர இடங்களிலும் வீதி ஓரங்களிலும் மரக்கறிச் சந்தைகளும் மீன் சந்தைகளும் திறக்கப்படலாயின.

சுருங்கக்கூறின் சந்தைகளை மூடிவிட ஊரெல்லாம் சந்தை என்பதாக நிலைமை மாறியது.

இதை நாம் கூறும்போது, சந்தைகளை மூடிவிட்டால் மரக்கறிகளையும் கடல் உணவுகளையும் விற்பனை செய்வது எங்ஙனம் என்ற கேள்வியும் மரக்கறிகளும் மீன்வகைகளும் விற்பனை செய்யப்படாவிட்டால், மக்களின் உணவுத் தேவை எவ்வாறு ஈடு செய்யப்படும் என்ற வினாக்களும் மேலெழும். இந்த வினாக்கள் நியாயமானவை.

ஆனால் நாம் இங்கு பிரஸ்தாபிப்பது அது பற்றியல்ல.

மாறாக, எந்த நோக்கத்துக்காக சந்தைகள் மூடப்பட்டனவோ, அந்த நோக்கம் இன்னொரு வடிவத்தில் – இன்னொரு தளத்தில் முறியடிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான்.

ஆக, சந்தைகள் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பை – கட்டிட அமைப்பைக் கொண்டவை என்பதால், மக்கள் செறிவை தவிர்க்கும் பொருட்டு சந்தை வியாபாரத்தை தவிர்த்து, ஐது படுத்தல் என்ற விடயம் எழுதா யாப்புக்குள் அமுலாக்கப்படுகிறது.

ஆனால் இங்கும் சுகாதாரப் பகுதியினரின் கண்காணிப்பும் தொற்று நீக்கமும் கொரோனாத் தடைக்கான நடைமுறைகளும் பின்பற்றப்பட வேண்டும் என்பதுதான் முக்கியமானது.

# மூடப்பட்டுள்ள சிறிய பாடசாலைகளை கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்ற சுகாதார அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

அவசர காலங்களில் கோவிட் -19 தொற்று நோய்களுக்கான சிகிச்சைக்காக தற்போது மூடப்பட்டுள்ள சிறிய பாடசாலைகளைப் பெறுவதில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

மாகாணங்களின் சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் இந்த நோக்கத்துக்குத் தேவையான ஏற்பாடுகளை செய்து வருவதாக அமைச்சின் பொது சுகாதார சேவைகளின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் லால் பனபிட்டிய தெரிவித்தார்.

தற்போது நாடு முழுவதும் சுமார் 70 கோவிட்-19 சிகிச்சை நிலையங்கள் உள்ளன.

இதற்கிடையில், நிபுணர் குழுக்களின் ஆலோசனையின் அடிப்படையில் கொரோனா தொற்று நோயைக் கட்டுப்படுத்த தற்போது நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களை திருத்துவதற்கு நம்புவதாக கோவிட் -19 தடுப்புக்கான இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. (ஞா)

# வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணத்தை வீணாக்காதீர்கள்

## நிதி நிறுவனங்களுக்கு அறுவுறுத்தல்

(கொழும்பு)

2021ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணத்தை முறையான நிர்வாகத்துடன் பயன்படுத்துமாறு அனைத்து அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு நிதி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர் எஸ் . ஆர் . ஆட்டிகல கையெழுத்திட்ட சுற்றறிக்கை மூலம் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில், பாராளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் வரவு-செலவுத் திட்டத்தில் கூடுதல் நிதி ஒதுக்க முடியாது என்று நிதி அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இதன் காரணமாக ஒதுக்கப்பட்ட பணத்தை முன்னுரிமையாக பரிசீலித்து பயன்படுத்த அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக எந்தவொரு செலவீனங்களுக்கும் அந்தந்த நிறுவனங்களின் கணக்காளர்கள் முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஞா)



# சிதம்பர தரிசனம்

ஈழத்துச் சிதம்பரத்தில் (2020.12.28) திருவெம்பாவை 8ஆம் நாள்

## திருவாதிரை தரிசனத்தை இரப்போர்க்கு அருள்பவன்

ஆதியொன்றும் இல்லாதான் அந்தமொன்றும் இல்லாதான்
சோதிமய மாயிருப்பான் சுந்தர நடம் பயிலும் திண்ணபுரத்தீசன்
இன்ப துன்பமறியாதான் எப்பிழையும் புரியாதான்
மன் பதைக்கு நல்லதொரு வழிகாட்டி ஆட்கொள்வான்
காலனையும் தன் காலால் காய்ந்த பெருந்திறளான்
வேலவனை விழிவழியே வியனுலகுக் கருளியவன்
மாலோ டயன் காண மலையாய் விளங்கியவன்
ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரை தரிசனத்தை
இரப்போர்க்கு அருளுகிறான்

செந்நாப்புலவர் மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இறைவனுக்குத் தேவை



உனக்குள்ளாக இருக்கக் கூடிய அறிவினைத் தெரிந்து கொள்ள முடியவில்லை, என்றால் அதற்கும் அப்பால் ஆதியாக இருக்கக்கூடிய ஐம்புலன்களால் உணர முடியாத இறைவனை எப்படி அறிய முடியும்? அதனால் முதல் கட்டமாக அறிவை அறிந்து கொள்வோம். ஒவ்வொரு நாளும் அனுபவத்தால். வாழ்க்கையிலே நம்முடைய அறிவு அந்த எல்லையை நோக்கி தான் வளர்ச்சி பெற்றுக் கொண்டு இருக்கிறது. மனிதனுடைய அறிவு இறைநிலையின் ஒரு பகுதி தான்.

அந்த இறைநிலையையும் அதன் ஒரு பகுதியாகிய இயற்கையையும் முழுமையாக உணர்ந்து கொள்ள வேண்டும் என்று அறிவு விரிந்து கொண்டே இருக்கிறது. எனவே இறைவனை பரிந்து கொள்வது என்றால் முதலில் அறிவைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு அறிவுக்கு மூலமான ஒரு நிலையை நாமச் செல்ல வேண்டும். அந்த நிலை தான் இறைநிலை எனவே அறிவை அறியாது இறைவனை அறிய முடியாது. ஏனெனில் இறைவனே தான் அறிவாக இருக்கிறான்.

இறைவன் என்னும் தத்துவம் எங்கும் நிறைந்துள்ள ஓர் பேராற்றல். அதனுடைய தன்மைகளில் இன்னொன்று அன்பு. அந்த அன்பு உங்கள் எண்ணம், சொல், செயல்களில் ஊடுருவி நிறைந்திருந்தால் அதுதான் நீங்கள் இறைவனுக்குச் செய்யக் கூடிய கடமை. எல்லோரிடத்திலும் அன்பைக் காட்டுங்கள், இறைவன் மகிழ்ச்சி அடைவான். ஏனெனில் அவன் அன்பும் கருணையுமாக அனைத்து உயிர்களிலும் நிறைந்துள்ளான். அவனை மகிழ்விக்க இதைவிடச் சிறந்த வழி வேறொன்றில்லை. உடலும், குடலும் அற்ற இறைவனுக்கு வேறு ஒரு தேவையுமில்லை. பொருட்களைக் கொடுத்து இறைவனை மகிழ்விக்க நினைப்பது அறியாமையே.

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## 27.12.2020 முதல் 20.12.2023 வரை



**மிதுன இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், 26.12.2020 அன்று 8 ஆம் இடமான அஷ்டமஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கின்றார். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் உங்களுக்கு தொடங்கி விட்டது. உங்கள் இராசிக்கு 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. ஆயுள் ஸ்தானம், பிதுர்ரார்ஜித ஸ்தானம் மற்றும் பாக்கிய ஸ்தானத்திற்கு அதிபதியான சனி, தனது சொந்த வீடான மகரத்தில் சஞ்சரிப்பதால் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்த மாட்டார். மகர இராசியில், ஏற்கனவே நீசம் பெற்ற குரு இருக்கிறார். அவரோடு இப்பொழுது சனி சேர்வதால் 'நீச்ச பங்க இராஜயோகம்' ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல, 8 ஆம் இடம் சனிக்கு ஆட்சி வீடாகவும் சொந்த வீடாகவும் இருக்கின்றது. எனவே விரயங்கள் ஏற்பட்டாலும் சுப விரயங்களே அதிகரிக்கும். இடமாற்றங்கள், ஊர்மாற்றங்கள், தொழில் மாற்றங்கள் இயற்கையாகவே வந்து சேரும். கடனில் ஒரு பகுதியை கொடுத்தாலும் மீண்டும் கடன் வாங்கும் அமைப்பு உருவாகும்.

### அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம்

டிசெம்பர் 26 ஆம் திகதி முதல் உங்கள் இராசிக்கு 8 இம் இடத்திற்கு வரும் சனி பகவானால், எண்ணற்ற மாற்றங்கள் வந்து சேரப் போகின்றது. குறிப்பாக ஆரோக்கியத்தில் அடிக்கடி சீர்கேடுகள் வரலாம். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கலாம். மனநிம்மதி கொஞ்சம் குறைவாகவே இருக்கும். உத்தியோக மாற்றங்களும் தொழில் மாற்றங்களும் மனதிற்கு ஏற்ற விதம் அமையாது. புதிய ஒப்பந்தங்கள் கைநழுவிப் போகலாம். பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்கும். வாகனங்களாலும் தொல்லை ஏற்படும். இதை ஒரு சோதனைக் காலமாகக் கூடக் கருதலாம். இருந்தாலும் சுய ஜாதகத்தில் தெசாபுத்தி பலம் பெற்றவர்களுக்கு, பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. சனிக்கிழமை தோறும் விரதமிருந்து வழிபடுவதன் மூலம் நல்ல பலன்களை வரவழைத்துக் கொள்ளலாம்.

### சனியின் பார்வை பலன்கள்

உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை, 2, 5, 10 ஆகிய இடங்களில் பதிகின்றது. வாக்கு, தனம், குடும்பம், புத்திரப்பேறு, தொழில் வளர்ச்சி ஆகியவற்றைக் குறிக்கும் இடங்களில் அதன் பார்வை பதிவதால் அவற்றில் எல்லாம் மாற்றங்கள் வந்து சேரும். குறிப்பாக 2 ஆம் இடத்தில் சனியின் பார்வை பதிவதால், குடும்பத்தில் பிணக்குகள் அதிகரிக்கும்.

சனியின் பார்வை பஞ்சம ஸ்தானத்தில் பதிவதால் பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. அவர்களாக சுய முடிவெடுத்து ஏதேனும் காரியங்கள் செய்வதன் மூலம் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்க நேரிடும். சனியின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் தொழிலில் புதிய வாய்ப்புகள் வந்து சேரும். பழைய தொழிலில் அக்கறை செலுத்த இயலாத சூழ்நிலை உருவாகும்.

### சனியின் பாதசாரப் பலன்கள்




27.12.2020 முதல் 27.12.2021 வரை: சூரியன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, சகோதரர்களுக்குள் பிரச்சினைகள் உருவாகலாம். இதுவரை உங்கள் செயலுக்கு உறுதுணையாக இருந்த உடன் பிறப்புகள் விலகக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். சொத்துக்களால் பிரச்சினைகள் ஏற்படும்.

28.12.2021 முதல் 26.01.2023 வரை: சந்திரன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். சந்திரன் உங்கள் இராசிக்கு தனாதிபதியாக விளங்குவதால் தொழில் முன்னேற்றமும் எதிர்பார்த்த இலாபமும் வந்து சேரும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள்.

27.01.2023 முதல் 19.12.2023 வரை: செவ்வாய் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, துரித கதியில் முன்னேற்றங்கள் ஏற்படும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். வியாபாரப் போட்டிகள் அகலும். வீடு, இடம், வாங்கும் யோகம் உண்டு. இடையில் கும்ப இராசியிலும் சனி சஞ்சரிக்கின்றார். அங்ஙனம் சஞ்சரிக்கும்பொழுது அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் மாறுகின்றது. எனவே இல்லம் தேடி இனிய பலன்கள் வரப் போகின்றது. அதிர்ஷ்ட தேவதையின் அரவணைப்பு கிடைக்கப் போகின்றது.

### குருப்பெயர்ச்சிக் காலம்

சனிப்பெயர்ச்சி காலத்தில் மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெற இருக்கின்றது. கும்பத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசியைக் குரு பார்ப்பதால் தடைகள் அகலும். உடல் ஆரோக்கியம் சீராகும். உயர்ந்த நிலையை அடைய சந்தர்ப்பங்கள் கூடிவரும். மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, தொழில் மாற்றங்கள் உருவாகலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு விரும்பத்தகாத இடத்திற்கு இடமாற்றங்கள் வந்து சேரலாம். மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளம் சிறப்பாக இருக்கும். வெளிநாட்டு முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

### ராகு-கேது பெயர்ச்சி காலம்

21.03.2020 இல் ராகு-கேது பெயர்ச்சி நடக்கிறது. அப்பொழுது மேஷத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிப்பதால், வியாபார விருத்தி ஏற்படும். இதுவரை ஏற்பட்ட சரிவை ஈடுகட்ட எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும். 08.10.2023 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின்போது, மீனத்தில் ராகுவும் கன்னியில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். இதனால் தொழில் முன்னேற்றம் உண்டு. அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு, புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு கிடைக்கும்.

### வெற்றி பெற வைக்கும் வழிபாடு

சனிக்கிழமை தோறும் விரதமிருந்து ஆனைமுகப் பெருமானையும் அனுமனையும் வழிபடுவதோடு, இல்லத்து பூஜை அறையில் விஷ்ணு படம் வைத்து விஷ்ணு கவசம் பாடி வழிபட்டால் வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும்.

### சனியின் வக்கிர காலம்

12.05.2021 முதல் 26.09.2021 வரை, 25.05.2022முதல்09.10.2022 வரை, 27.06.2023 முதல் 23.10.2023 வரை என மூன்று முறை சனி வக்கிரமடைகின்றார். இக்காலம் உங்களுக்கு ஒரு பொற்காலமாகவே அமையும். தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய எடுத்த முயற்சி வெற்றிபெறும். உறவினர் பகை மாறும். 9 ஆம் இடத்திற்கும் அதிபதியாக சனி விளங்குவதால் ஒருசில சமயங்களில் பெற்றோர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள்.

## அஷ்டமத்தில் வருகிறது சனி, அமைதிதான் தேவை இனி!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

பெண்களுக்கு இந்த சனிப்பெயர்ச்சி காலத்தில், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகம் தேவைப்படும். பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்கும். கணவன்- மனைவிக்குள் கருத்து வேறுபாடு ஏற்படாமல் இருக்க, விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளை உங்கள் கண்காணிப்பில் வைத்துக்கொண்டால் பிரச்சினைகள் ஏற்படாது. தாய் மற்றும் சகோதரர்கள் தக்க சமயத்தில் உதவிக்கரம் நீட்டுவர்.

பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள் வரலாம். விரயங்கள் அதிகரிக்கும். ஆரோக்கியத்திற்காகவும் செலவிடுவீர்கள். சனியின் வக்கிர காலத்தில் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. (தொடரும்)

## முதியவரின்...

சேர்ந்த 69 வயதுடைய மாணிக்கம் பாலசிங்கம் என்பவருடைய சடலமே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேலும் குறித்த முதியவர் 2 நாட்களாக காணாமல் போயிருந்த நிலையில் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருக்கின்றார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

## 380 கிலோ...

ஞாயிற்றுக்கிழமை முற்பகல் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (ஞா-18,60)

## புதுக்குடியிருப்பு...

புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவரிடம் பெறப்பட்ட கோவிட் - 19 வைரஸ் மிக வீரியம் கூடியதாகும்.

மேலும் வேகமாக பரவும் அபாயம் கொண்டதுமாகும். தொற்றுக்குள்ளான நபர் தனிமைப்படுத்தலில் இருக்கவில்லை என்பதுடன் சமூக மட்டத்தில் நடமாடியுள்ளதால் அங்கு பலருக்குத் தொற்று பரவியிருக்கலாம்.

தொற்றாளர்கள் பலர் நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தாமல் இருக்கலாம் என பணிப்பாளர் எச்சரித்துள்ளார். (ஞா)

## வடக்கு - கிழக்கு...

ஆகிய மாகாணங்களுக்கு கனமழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறித்த பகுதிகளில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

பலத்த மழை பெய்யும்போது மின்னல் தாக்கம் ஏற்படலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## திரையரங்கு...

சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அனுமதியளித்துள்ளார்.

திரையரங்குகள் மூடப்பட்டுள்ளமையினால் கலைக்கும் கலைஞர்களுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் திரைப்பட தயாரிப்பாளர்கள், திரைப்பட இயக்குநர்கள் மற்றும் திரைப்பட கண்காட்சியாளர்கள் சங்கம் உள்ளிட்ட கலைஞர்கள் பலர் சமீபத்தில் பிரதமருக்கு அறிவுறுத்தியிருந்தனர்.

அதன் பிரதிபலனாக சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி தனிமைப்படுத்தல் சட்டங்களுக்கு மதிப்பளித்து திரையரங்குகள் திறக்கப்பட வேண்டும் என பிரதமர் ஆலோசனை வழங்கினார். (ஞா)

## மேலும் இரண்டு...

குளத்திற்கு அதிக நீர் வருகை காணப்பட்டுள்ள நிலையில் குறித்த வான் கதவுகள் திறந்து விடப்பட்டன.

இதனால் எந்தப் பாதிப்பும் இல்லை எனவும், ஆனால் மக்கள் விழிப்புடன் இருக்குமாறும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கனகாம்பிகைக்குளம், அக்கராயன்குளம், பிரமந்தனாறுகுளம் உள்ளிட்டவை வான் பாய்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஞா-100)

## புதிய அரசமைப்...

வெளிப்படுத்தி விட்டேன். ஒரு நாடு ஒரு சட்டம் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தப் போவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஒன்பது மாகாணங்களிலும் வெவ்வேறு சட்டங்கள் காணப்பட முடியாது.

இதன் காரணமாக அரசாங்கம்மாகாண சபைகள் முறையை முற்றாக நிராகரிக்க வேண்டும். தற்போதைய சூழ்நிலைகள் காரணமாக புதிய அரசமைப்பினை உருவாக்கும்வரை மாகாண சபைத் தேர்தல்களை பிற்போட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஞா)

## முதல்வர்...

தவிசாளர் பதவிக்கு யாரைப் பிரேரிப்பது என்பது தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் இறுதி செய்யப்படவில்லை.

யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை என்பனவற்றின் முதல்வர் மற்றும் தவிசாளர் தெரிவுகள் எதிர்வரும் 30ஆம் திகதி மீண்டும் இடம் பெறவுள்ளன. (ஞா)

## யாழில் இன்று...

தையடுத்து அவர்களின் உறவுகளின் வேண்டுகோளுக்கு இணங்க சிறைகளில் உள்ள அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்தக் கோரியும் அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் பின்புறமாக உள்ள நல்லை ஆதீன முன்றலில் இந்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ஞா)

## வரலாறுகள்...

ஏற்பட்ட யுத்த சூழ்நிலைகளைத் தொடர்ந்து பல்வேறுபட்ட இளைஞர், யுவதிகள் வகைதொகையின்றி இராணுவப் படைகளாலும் புலனாய்வுப் பிரிவினராலும் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் அவர்களைத் தேடி அலைந்த அவர்களின் பெற்றோர்கள், பிள்ளைகள், சகோதரங்கள், உற்றார், உறவினர்கள் எனப் பலர் தமது இறுதி மூச்சுவரை மகனை அல்லது மகளை அல்லது சகோதர சகோதரிகளை அல்லது உற்றவரை, உறவினரைத் தேடி அலைந்து, அவர்களுக்காக நீதி கோரிய போராட்டங்களில் தொடர்ந்து ஈடுபட்டு இறுதியில் நோய் வாய்ப்பட்டு இறப்பைத் தழுவிக் கொண்ட 74 பேரின் பதிவுகள் இந்த நூலில் காணப்படுகின்றன. ஏமாறிய நிலையில் இவ்வுலகைவிட்டு ஏகியவர்களின் விபரக் கோவையே இன்று (நேற்று) வெளியிடப்படும் நூல்.

பண்டைய தமிழ் மக்களின் வரலாறுகள், அவர்களின் இருப்புக்கள், பாரம்பரியங்கள் என்பன நூல் வடிவிலோ, ஓலைச் சுவடிகளிலோ அல்லது கற்களில் வடித்தோ முறையாக பேணப்படாமையால் இன்று எமது சரித்திர வரலாறுகள் திரிபுபடுத்தப்பட்டு வருகின்றன. தினம் தினம் மாற்றி எழுதப்பட்டு வருகின்றன. பெரும்பான்மை மக்களின் சாசனங்கள் வாயிலாக வரலாறு தமிழர்க்கு எதிராகத் திரிக்கப்பட்டு எழுதப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்லாது இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளாகிய 3000 வருடங்கள் பழைமை வாய்ந்த தமிழர்களின் வரலாறுகள் நீக்கப்பட்டு கிறிஸ்துவுக்குப் பின் 6ம்,7ம் நூற்றாண்டளவில் வழக்கிற்கு வந்த சிங்கள மொழி பேசுவோரே இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் எனவும் தமிழ் மக்கள் அதன் பின்னைய காலங்களில் குடியேறிய மக்கள் எனவும் சிருஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இனப்படுகொலையின் ஒரு அம்சமாகவே இதனை நாம் பார்க்க வேண்டியுள்ளது என்றார். (ஞா)

## சங்...

பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு தொற்று உள்ளதாக அறிக்கை கிடைத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம்மருதனார்மடம்கொரோனா வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்ட 17ஆவது நாளில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 110ஆக உயர்வடைந்துள்ளது. (ஞா-18)

## ஜனாஸாக்களை...

காணப்பட்டுள்ளன. தரை மட்டத்தில் இருந்து 30 அடி ஆழத்தில்கூட தண்ணீரைக் கண்டுபிடிக்க முடியாது என்று நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் நீர் வழங்கல் அமைச்சின் புவியியலாளர் ஆய்வு செய்து ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் சுகாதார அமைச்சரிடம் சமர்ப்பித்ததாக அமைச்சர் நாணயக்கார மேலும் தெரிவித்தார். (ஞா)

## 4 பேர் பலி...

னர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு அறிவித்துள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 191ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன், நாட்டில் நேற்று 674 பேர் கோவிட் - 19 நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 41 ஆயிரத்து 54 பேர் கொரோனா வைரஸ்தொற்றால்பாதிக்கப்பட்டுள்ளனர். (ஞா)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1645 திகதி 2020.12.27
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 35 45 48 58
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0716
U 15 34 37 53 54

மஹஜன சம்பத
திகதி 2020/12/27
சீட்டிழுப்பு இலக்கம் 4349
ஆங்கில எழுத்து E
வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 1 8 7 7 8
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 27.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2644
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 09 20 61 80
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2020.12.27
சீட்டிழுப்பு இலக்கம் -386
X 20 52 60 74
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1145
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 27.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 93,861,275
வெற்றி இலக்கங்கள் 30 55 63 71 ஆங்கில எழுத்து D
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3475
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 27.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 37,777,263
வெற்றி இலக்கங்கள் 02 22 57 63 K
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி: 27.12.2020
வெற்றி வாரம்: 3026
வர்ணம்: ஊதா
வெற்றி இலக்கங்கள் 05 24 39 51 விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,266,124

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1319 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 27/12/2020 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் R 03 30 46 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் 60,108,650
அபிவிருத்தி லொத்தர் சபை

E 15 52 58 80
669 மஞ்சள் 27.12 2020
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,766,855
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## வகுப்பு

German, Swiss செல்பவர்களுக்கான டொச் வகுப்புக்கள் மற்றும் A1 பரீட்சைக்குரிய இலகுவான வழிகாட்டலும் மற்றும் Personal Class களும் கற்பித்துக் கொடுக்கப்படும். (C-1019)

**தொடர்பு : 076 401 8564**

## புதுக்குடியிருப்பில் 65 குடும்பங்கள் தனிமைப்படுத்தல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு - கோப்பாவில் பகுதியில் தொற்றுக்குள்ளான நபருடன் தொடர்புகளை பேணிய சுமார் 65 குடும்பங்களைச்சேர்ந்த 194 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

(ஞா-281)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (5068)

## மணிவிழா வாழ்த்துக்கள்



தனது ஆசிரிய சேவையின் கடந்த 10 வருடங்களாக எமது கல்லூரியின் ஆசிரியையாகக் கடமையாற்றி அகவை 60 இல் தனது பணியில் நிறைவு கண்ட

Congratulations

திருமதி
**பவனேஸ்வரி முருகானந்தன் (B.A)**

**சேவை விபரம்**



யா / வதிரி திரு இருதயக் கல்லூரி
23.02.1998 - 18.09.1999

யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
19.09.1999 - 09.05.2010

யா / வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
10.05.2010 - 28.12.2020

தனது சேவைக் காலத்தில் அனைவரதும் நன்மதிப்பைப் பெற்று பணிநிலை ஓய்வுபெற்ற திருமதி **பவனேஸ்வரி முருகானந்தன்** அவர்கள் ஓய்வுக் காலத்தில் சகல சௌபாக்கியங்களோடும் நீண்ட ஆயுளோடும் என்றென்றும் மகிழ்வுற்றிருக்க வேண்டுமென உளநிறைவோடு வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா / வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
வதிரி, கரவெட்டி.

(C-1041)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## மீண்டும்



## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும்
**100%** பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-894)

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- **021 222 6113**

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- **021 222 3536**



## சிறுநீரகம் தேவை

O,B இரத்த வகையை உடைய சிறுநீரகம் தேவை. (5085)

**076 239 9874**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-1000/=Kg**


பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் **1150/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

| | | |
|---|---|---|
| ● யாழ்ப்பாணம் | ● புத்தூர் | ● கோப்பாய் |
| ● நெல்லியடி | ● கொடிகாமம் | ● மானிப்பாய் |
| ● புதுக்குடியிருப்பு | ● சுன்னாகம் | ● கிளிநொச்சி |
| ● பருத்தித்துறை | ● வல்வெட்டித்துறை | ● சாவகச்சேரி |

**0768226240** DHL (C-962)

## மரண அறிவித்தல்



### வல்லிபுரம் ரத்தினசிங்கம்

**(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் - உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை)**

கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் ரத்தினசிங்கம் நேற்று (27.12.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, தம்பிராசா, இராசம்மா, யோகம்மா மற்றும் பொன்னம்மா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், சுகந்திராதேவி, தராசிங்கம் மற்றும் றஞ்சனாதேவி, தியாகராஜா, சந்திராதேவி, இந்திராதேவி, காலஞ்சென்ற அருந்தவராசா மற்றும் செல்வராணி, ராதிகா, தேவிகா, அமுதா, சுதாகரன் ஆகியோரின் மாமனாரும் ஜீவா, சுஜி, சிறி, தாஸ், சுதா, கரன், தரிசினி, சுஜி, அஜந்தா, சுஜா, சுக்குறு, கேசவன், விபிஷன், சுதா, சுரேஸ், சுதன், சுதாகர், விஜி, சுசி, சபேஷன், கார்த்திகா, துசேன், தீபன், பிரதீபன், அனு, றுக்சன், தனுசா, ரவின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2020) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் ஊரிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1040)

சர்வானந்தம் - 077 158 4259
ரஞ்சி - 077 188 2241
ராணி - 076 437 9780
குகதாஸ் - 077 571 3355

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

தகவல்:-
குடும்பத்தினர்

## வேலை வாய்ப்பு

### NEW YEAR NEW CAREER

இலங்கையில் முன்னணி வகிக்கின்ற NO. 01 நிறுவனமான INNER CIRCLE (PVT) Ltd இற்கு துடிப்பும் கடினமாக உழைக்கக் கூடிய ஆண், பெண் இருபாலாருக்கும் குறுகிய காலத்தில் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற நினைப்பவர்களுக்கும் மேலதிக கல்வியைத் தொடர இயலாத இளம் சமுதாயத்திற்கும் அரியதொரு வாய்ப்பு!

வயதெல்லை : 18 - 26, தகைமை : O/L or A/L, அனுபவம் அவசியமற்றது, பயிற்சியின்போது 24,550/= , EPF + ETF , பயிற்சியின் பின் 45,000/= , தங்குமிட வசதியுண்டு.

- Administrator
- Customer Service
- Supervisor
- Receptionist
- Assistant Managers
- Store Keepers
- Clerks
- Training Managers

100/3, 3rd Floor, முட்டாசு கடைச் சந்தி, யாழ்ப்பாணம்.
**தொடர்புகளுக்கு : 076 770 7759**

the Inner Circle (5086)

## கண்ணீர் அஞ்சலி



பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய எமது ஆசிரியப் பெருந்தகை

**திரு. ஐ. வரதராஜன்**
*(அதிபர், ஆசிரியர் - எழுதுமட்டுவாழ்)*

அவர்களது திடீர் மறைவுச் செய்தி கேட்டு சொல்லொணா வேதனை அடைகின்றோம். எம்மைப் போன்றவர்களை உருவாக்கியதில் அவரது பங்கு மதிப்பிடற்கரியது. அவரது அளப்பரிய கல்விச் சேவைகளையும் அபரிமித பன்முக ஆற்றல்களையும் நன்றியுடனும் மரியாதையுடனும் நினைவுகூரும் அதே நேரத்தில் கரம் கூப்பி சிரந்தாழ்த்தி எமது கண்ணீர் அஞ்சலியை அன்னாருக்கு உரித்தாக்குகின்றோம். (C-1038)

பிரிவால் துயருறும்
பழைய மாணவர்கள் த. கோவிந்ததாஸ்,
இ. குணநாதன் மற்றும் அ. அகிலதாஸ்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.